விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 065 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 10 புதன்கிழமை (22.02.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## தேர்தல் கட்டுப்பணத்தை மீள வழங்க முடியாது

### தேர்தல்கள் ஆணைக்குழு

(கொழும்பு)

மார்ச் 9ஆம் திகதி உள்ளூராட்சித் தேர்தலை நடத்த முடியாது என உயர் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும், கட்டுப்பணத் தொகையை மீள வழங்க முடியாது என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

வேட்புமனுக்களை இரத்துச் செய்வதற்கு அரசாங்கம் பாராளுமன்றத்தில் சட்டமூலமொன்றை சமர்ப்பிக்க வேண்டும், இல்லை

15

## 13ஐ எதிர்ப்பவர்கள் மனநோயாளிகள்



### அவர்கள் சட்டத்தை முழுமையாக படிக்க வேண்டும் – சந்திரிகா

3ஆம் பக்கம் பார்க்க

## 4 பெண்கள் உட்பட 21 தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் அமைப்பை மீள் உருவாக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டனர் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கடந்த 2014ஆம் ஆண்டு வட மாகாணத்திலும் கொழும்பிலும் கைது செய்யப்பட்ட 4 பெண்கள் உட்பட 21 தமிழ் அரசியல் கைதிகள் நேற்று கொழும்பு மேலதிக நீதவான் நீதிமன்றத்தால் எதுவித குற்றச்சாட்டுக்களும் இன்றி விடுவிக்கப்பட்டுள்ளனர்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## தேசிய பாதுகாப்பு சபையை ஸ்தாபிக்க

### அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

தேசிய பாதுகாப்புச் சபையை ஸ்தாபிப்பதற்கான சட்டமூலமொன்றை தயாரிப்பது தொடர்பில் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இலங்கையின் தேசிய பாதுகாப்பு சபையானது 1999ஆம் ஆண்டு

15

### கணவருடன் வாக்குவாதம்

## தனது மகன்களை தண்ணீரில் தள்ளி கொலை செய்த தாயார்

(இரத்தினபுரி)

கணவருடன் ஏற்பட்ட வாக்குவாதத்தையடுத்து தனது இரு மகன்களை தாயாரே தண்ணீரில் தள்ளி கொலை செய்த சம்பவம் ஒன்று

15

## பொருளாதார பிரச்சினையை நீதிமன்றத்தில் தீர்க்க முடியாது

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



(கண்டி)

நாட்டின் அடிப்படைப் பிரச்சினை பொருளாதார பிரச்சினை எனவும் அது நீதிமன்றத்தில் தீர்த்துக்கொள்ளக் கூடிய விடயமல்ல எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று மாலை நடைபெற்ற நிகழ்வொன்றிலேயே ஜனாதிபதி இதனைக் கூறியுள்ளார்

எதிர்காலத்தில் நடைபெறவுள்ள தேர்

15

### தேர்தலுக்கான நிதி வழங்காமை

## உயர் நீதிமன்றத்தை நாடியது எதிர்க்கட்சி

(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தலுக்கான நிதியை தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு வழங்காத தீர்மானத்திற்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி உயர் நீதிமன்றத்தை நாடியுள்ளது.

வரவு - செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியை தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு விடுவிக்காதிருக்க எடுத்த தீர்மானத்திற்கு எதிராகவே இந்த மனு

15

## பணவீக்கம் வீழ்ச்சியடைவு

(கொழும்பு)


தேசிய நுகர்வோர் விலை சுட்டெண் அடிப்படையிலான பணவீக்கம் கடந்த ஜனவரி மாதத்தில் வீழ்ச்சியடைந்துள்ளது.

தொகை மதிப்பீட்டு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விட

15

## உடனடியாக தேர்தலை நடத்துமாறு கோரி

### சபையில் எதிர்க்கட்சிகள் ஆர்ப்பாட்டம்



03

## தேர்தலை நடத்துவதற்கான நிதியை திரட்டத் தயார்

### பஃவ்ரல் அமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கான நிதியை திரட்டுவதற்கு தேர்தல் கண்காணிப்பாளர்கள் தயாராக உள்ளதாக பஃவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

நிதிப் பற்றாக்குறைதான் உண்மையான பிரச்சினை என்றால் தேர்தலுக்கான நிதியைப் பெறுவதற்கான பணிகளை இந்த வாரத்தில் இருந்து தொடங்கத் தயாராக உள்ளதாக

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பணியாளர் தேவை

நெல்லியடியில் இயங்கும் உணவகத்திற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.

1. சமையல் உதவியாளர்.
2. உணவு பரிமாறுபவர்.

தங்குமிடம் உணவு வழங்கப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

(c6025)

தொடர்புகளுக்கு :- 077 362 0979


# வரிக் கொள்கையை மாற்றினால் ஐ.எம்.எவ்வுடன் உடன்பட முடியாது

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

தற்போதைய வரிக் கொள்கையானது சாதாரண வரிக் கொள்கையன்றி மீட்பு நடவடிக்கை எனவும் இந்தச் செயற்பாடு சீர்குலைந்தால் சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்பாடுகளை மேற்கொள்ள முடியாத நிலை மட்டுமன்றி எந்தவொரு நாட்டுடனும் கொடுக்கல் வாங்கல் செய்யும் வாய்ப்பை இலங்கை இழக்கவும் நேரிடும் என வும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

2023ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் சாதாரண வரவு செலவுத் திட்டம் அல்ல எனவும், பொருளாதாரத்தை மீட்பதற்கான நடவடிக்கை எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு கிங்ஸ்பரி ஹோட்டலில் நேற்று நடைபெற்ற 2023 வரி மாநாட்டில் ஆரம்ப உரை நிகழ்த்திய போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

இலங்கை வர்த்தக சம்மேளனம் தவிர்ந்த எந்தவொரு கட்சியோ, நபரோ அல்லது நிறுவனமோ சர்வதேச நாணய நிதியத்திற்கு முன்மொழிவுகளையோ மாற்று வழிகளையோ சமர்ப்பிக்கவில்லை எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்பாடு எட்டப்பட்டவுடன் அதனை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதாகவும் அதனை நிறைவேற்றவோ அல்லது நிராகரிக்கவோ வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவித்த ஜனாதிபதி அதனை நிராகரிப்பதாக இருந்தால் சம்பந்தப்பட்ட தரப்பினர் சர்வதேச நாணய நிதியத்திற்கு மாற்று யோசனைகளை சமர்ப்பிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

எமது நாட்டின் பிரதான கடன் வழங்குநர்களான பாரிஸ் கிளப், இந்தியா மற்றும் சீனாவுடனான கடன் மறுசீரமைப்பு செயற்பாடு தொடர்பில் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, இலங்கைக்கு நிதி ஒத்துழைப்பு வழங்குவதற்கு பாரிஸ் கிளப் உத்தரவாதம் அளித்துள்ள தாகவும் இந்தியா தமக்கு தனித்துவமான முறையை பின்பற்றும் அதே வேளை சீனா அந்த முறையை இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை என்றார். (ம-7)


# 4ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் திருமதி

**ஸ்ரீலோகநாதன் வசந்தா**

திதி: மாசி மாத பூர்வபக்ஷ திருதியை 22.02.2023

அம்மா நீங்கள் எங்களோடு
வாழ்ந்து எங்களைவிட்டுப் பிரிந்து
நான்கு ஆண்டுகள் ஓடி மறைந்து விட்டது
மறப்போமா உங்கள் திருமுகத்தை
உங்களை நினைத்து நினைத்து
கண்கள் கலங்குகின்றன.
என்றும் உங்கள்
நினைவாகவே வாழ்கின்றோம்.

(14682)

இல.80, பழம் வீதி, கந்தர்மடம். 077 271 9000

கணவர் செ.ஸ்ரீலோகநாதன்
மகன் வித்தகன்


# வங்கித்துறையை பாதுகாக்க நடவடிக்கை மத்திய வங்கி ஆளுநர்

நாட்டின் வங்கித் துறையை பாதுகாப்பதற்குத்தேவையான சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய வங்கியின் ஆளுநர், கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற 33ஆவது வங்கி ஊழியர் ஆண்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் கூறினார்.

தடைகளை பொருட்படுத்தாது, தற்போதைய நிலைமைக்கு அமைவாக வங்கி கட்டமைப்பை முன்நகர்த்துவோம் என்ற தொனிப்பொருளில் தொழில்சார் வங்கி ஊழியர்களின் மாநாடு நடைபெற்றது.

இலங்கையின் வங்கித் துறையைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் பலர் இதில் கலந்துகொண்டனர்.(ம-7)

# கடன்களை அரசு தொடர்ந்து செலுத்தி வருகின்றது - பந்துல

(கொழும்பு)

பலதரப்பு முகவர் நிறுவனங்களால் வழங்கப்பட்ட கடன்களை அரசாங்கம் தொடர்ந்தும் செலுத்தி வருவதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று காலை இடம்பெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பிலேயே அமைச்சர் பந்துல குணவர்தன இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை மக்களுக்கு சலுகைகளை வழங்கி பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த திறைசேரியும் அரசாங்கமும் அயராது உழைத்து வருவதாக அவர் கூறியுள்ளார்.

அரசியல் மாற்றம் நெருக்கடிக்கு தீர்வை வழங்காது என்றும், நாடு முன்னேற அனைவரும் ஒன்றிணைந்து முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்றும் அமைச்சர் பந்துல குணவர்தன வலியுறுத்தியுள்ளார். (ம-7)


# மரண அறிவித்தல்

தோற்றம் 07 - 03 - 1942



மறைவு 20 - 02 - 2023

**இளையவி சிவராஜா**

(அரச நெற்சந்தைப்படுத்தும் சபை முன்னாள் உத்தியோகத்தர்)

முள்ளியவளையைப் பிறப்பிடமாகவும் அரியாலை, திருகோணமலை தற்போது உரும்பிராயையும் வதிவிடமாகவும் கொண்ட இளையவி சிவராஜா அவர்கள் 20.02.2023 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையவி - பார்வதி தம்பதியினரின் இளையமகனும் அரியாலை சிவநாமம் - நவமணி(பவளம்) தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற ஜெயச்சந்திராதேவியின் அன்புக் கணவரும் பிரதீபன் (தாய்லாந்து), ராஜதீபன், தாட்சாயினி (லண்டன்), காளிதாஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான நாகம்மா, அரியகுட்டி(தேவராசா), வள்ளிப்பிள்ளை (இரத்தினம்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ரமீலா, கஜேந்தினி, பிரபாகரன், கீர்த்தனா ஆகியோரின் அன்பு மாமனாரும் கலாபூசணம் சிவநேசன், சிவதாசன் (சமாதான நீதவான்), மாஸ்டர் ஜெயராசா (திருகோணமலை) காலஞ்சென்ற பவானி மற்றும் சத்தியகுமாரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் பிரஸ்ரினா (ஆங்கில விரிவுரையாளர்), பிரசாயினி (ஆங்கில விரிவுரையாளர்), விஜய்பிரஸ்ரிகன், பிரஷான், ராஜகஜேந்தினி, கஜினா, மானிசா, தினோச், கபீஸ், கஜித், கனித் ஆகியோரின் ஆசைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 22.02.2023 (புதன்கிழமை) நண்பகல் 12 மணியளவில் அம்மன் வீதி, உரும்பிராய் மேற்கிலிருக்கும் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக உரும்பிராய் வேம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அம்மன் வீதி, மேற்கு, உரும்பிராய். (14680)

தகவல் குடும்பத்தினர் 076 328 3503


# கொழும்பில் அமைந்துள்ள இந்திய விசா நிலையத்துக்குள் அத்து மீறி நுழைந்த ஐவர் கைது

கொழும்பில் உள்ள இந்திய விசா நிலையத்துக்குள் அத்துமீறி நுழைந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 15ஆம் திகதி அதிகாலை தும்முல்ல பிலிப் குணவர்தன மாவத்தையில் அமைந்துள்ள இந்திய விசா நிலையத்துக்குள் நுழைந்து தலைமைப் பிரதிநிதியின் மடிக்கணினி திருடப்பட்டுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்தது.

இந்திய விசா நிலையமான ஜவிஎஸ் லங்கா (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தில் இருந்து மடிக்கணினி மற்றும் இரண்டு டிஜிட்டல் வீடியோ ரெக்கார்டர்களை (டிவிஆர்) திருடப்பட்டன.

இதன் காரணமாக விசா வழங்குவதுடன் சர்வதேச மட்டத்தில் அனைத்து நடவடிக்கைகளும் ஸ்தம்பிதமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)




# அளவெட்டி அழகொல்லை விநாயகர் ஆலய தர்ம பரிபாலன சபைப் பொதுக்கூட்ட நினைவூட்டல் - 2023

அளவெட்டி அழகொல்லை விநாயகர் ஆலய தர்மபரிபாலன சபைப் பொதுக்கூட்டமானது 2023.02.24 ஆம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு ஆலய மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெற இருப்பதனால் பொதுச்சபை உறுப்பினர்கள் அனைவரையும் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்வதுடன் புதிய தர்ம பரிபாலன சபைத் தெரிவையும் மேற்கொண்டு உதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

திரு.மா.கதிரைமலைப்பிள்ளை
செயலாளர்
அழகொல்லை விநாயகர் ஆலய
தர்மபரிபாலன சபை
அளவெட்டி.

(14685) 21.02.2023


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலை நடத்துமாறு கோரி


## பாராளுமன்றில் எதிர்க்கட்சிகள் ஆர்ப்பாட்டம்

### பாராளுமன்ற அமர்வுகள் ஒத்திவைப்பு

(கொழும்பு)

**தேர்தலை உடனடியாக நடத்துமாறு கோரி பாராளுமன்ற சபை நடவடிக்கைகளுக்கு மத்தியில் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களால் நேற்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.**





இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்கள் தேர்தல் வேண்டுமென கூச்சலிட்டவாறும் "தேர்தலுக்கு பயந்த அரசாங்கமே தேர்தலை நடத்து" உள்ளிட்ட வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியபடி ஆர்ப்பாட்டம் முன்னெடுத்ததையடுத்து பாராளுமன்றில் அமளிதுமளி ஏற்பட்டிருந்தது.

சபை நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில், கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டம் தொடர்ந்ததையடுத்து, சபாநாயகர் சபை நடவடிக்கையை இன்று காலை 9.30 வரை ஒத்திவைத்தார். (நி)

## பாராளுமன்றத்தை கலைக்க வேண்டும் ஜனாதிபதி ரணிலிடம் பீரிஸ் வலியுறுத்து



(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசியலமைப்பின் ஊடாக தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை பயன்படுத்தி தற்போதைய பாராளுமன்றத்தைக் கலைக்க வேண்டும் என ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த அவர், பாராளுமன்றத்தை கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு மட்டுமே தற்போது உள்ளது.

தற்போதைய பாராளுமன்றம் மக்களின் உணர்வுகளை பிரதிபலிக்கவில்லை என்பதனால் உடனடியாக பொதுத் தேர்தலை நடத்த வேண்டும் எனத் தெரிவித்தார். (நி)

## அதிகாரங்களை பகிராமல் தீர்வு காண முடியாது

### சந்திரிகா பண்டாரநாயக்க

(கொழும்பு)

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்துக்கு எதிராகக் கொதித்தெழும் பாராளுமன்ற உறுப்பினர்களை மனநோயாளிகள் என்றே சொல்ல வேண்டும். முதலில் அவர்கள் நாட்டிலுள்ள சட்டங்களின் பரிந்துரைகளை முழுமையாக வாசிக்க வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

13 ஆவது திருத்தச் சட்டத்துக்கு எதிராக ஆளும், எதிரணியில் உள்ள எம்.பிக்கள் சிலர் வெளியிட்டு வரும் கருத்துக்களுக்குப் பதில்வழங்கும்போதே சந்திரிகா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "1987 ஆம் ஆண்டு ஜூலை 29 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் காரணமாக 13 ஆவது திருத்தச் சட்டம் நடைமுறைக்கு வந்தது. இலங்கை பாராளுமன்றத்தின் அனுமதியுடன்தான் இந்தத் திருத்தச் சட்டம் நடைமுறையில் உள்ளது.

ஆனால், இந்தத் திருத்தச் சட்டத்தில் உள்ள பரிந்துரைகள் இன்னமும் முழுமையாக அமுலாகவில்லை. அதனை முழுமையாக அமுல்படுத்த வேண்டும். அதிகாரங்களைப் பிகிராமல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியாது" என அவர் தெரிவித்தார். (நி)

## உரம் தாங்கிய கப்பல் அடுத்த மாதம் இலங்கைக்கு

(கொழும்பு)

36 ஆயிரம் மெற்றிக் தொன் ட்ரிப்பல் பொசுப்பைற்று அடங்கிய கப்பல் ஒன்று அடுத்த மாதமளவில் நாட்டை வந்தடையவுள்ளதாக விவசாய அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் நிதியுதவியின் கீழ் இந்த உரம் பெற்றுக் கொள்ளப்படவுள்ளது.

பெற்றுக் கொள்ளப்படவுள்ள இந்த உரத்தினை சிறு போகத்தில் நெல் பயிரிடவுள்ள விவசாயிகளுக்கு இலவசமாக வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

பெப்ரவரி மாத இறுதியில் பெரும்போகம் ஆரம்பிக்கப்படவுள்ளமையினால் 3 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் பொசுப்பைற்று உரத்தினை பணத்திற்கு கொள்வனவு செய்து விவசாயிகளுக்கு இலவசமாக வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## ஏப்ரல் வரை போதுமான மசகு எண்ணெய் கையிருப்பில் உள்ளது-பெற்றோலிய கூட்டுத்தாபனம்

(கொழும்பு)

ஏப்ரல் மாதம் வரை போதுமான மசகு எண்ணெய் கையிருப்பில் உள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

சபுகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையத்தில் தற்போது நாளொன்றுக்கு 30,000 பீப்பாய் எரிபொருள் சுத்திகரிக்கப்பட்டு விநியோகிக்கப்படுவதாக கூட்டுத்தாபனத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

800 மில்லியன் ரூபாய் பெறுமதியான எரிபொருள், இலங்கை மின்சார சபைக்கு வழங்கப்பட்வுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த எரிபொருள் தொகைக்கான கட்டணத்தை இலங்கை மின்சார சபை, எதிர்வரும் நாட்களில் செலுத்தவுள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சிரேஷ்ட பேச்சாளர் தெரிவித்தார்.

பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தினால் நெப்டா, டீசல் மற்றும் பல எரிபொருள் வகைகள் இலங்கை மின்சார சபைக்கு வழங்கப்படுகின்றன.

உபரியான சுத்திகரிப்பு எரிபொருள் தொகை களஞ்சியப்படுத்தப்படுவதுடன், இவ்வாறு களஞ்சியப்படுத்தப்படும் சுத்திகரிக்கப்பட்ட எரிபொருள் தொகையானது கப்பல்கள் மூலம் திருகோணமலை எண்ணெய்த் தாங்கி வளாகத்திற்கு அனுப்பப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

## 4800 அதிபர் வெற்றிடங்கள்; நிரப்புவதற்கு ஆணைக்குழு அனுமதி

(கொழும்பு)

நான்காயிரத்து எண்ணூறு அதிபர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அரச சேவை ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

இதற்காக சுமார் பத்தாயிரம் பேர் விண்ணப்பித்துள்ளதுடன், இது தொடர்பான நேர்காணல்களை இந்த வாரம் முதல் ஆரம்பிக்க கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது.

இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு அனுமதிக்குமாறு கல்வி அமைச்சு விடுத்த கோரிக்கைக்கு பதிலளிப்பதில் தொடர்ந்தும் தாமதம் ஏற்பட்டதால், கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பாராளுமன்றத்தில் ஆட்சேபனை தெரிவித்ததையடுத்து அரச சேவை ஆணைக்குழு தற்போது அனுமதி வழங்கியுள்ளது. (நி)

## தேர்தல் பணிக்கு அனுப்பப்பட்ட பொலிஸார் மீள அழைப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தலுக்காக நாடளாவிய ரீதியில் 25 மாவட்டச் செயலகங்களில் அமைக்கப்பட்டுள்ள தேர்தல் தகராறு தீர்க்கும் நிலையங்களில் கடமையாற்றியிருந்த சகல பொலிஸ் உத்தியோகத்தர்களும் அப்பணியில் இருந்து தற்காலிகமாக விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம், விசேட பொலிஸ் செய்தியொன்றின் ஊடாக அறிவித்துள்ளது.

இந்த விசேட பொலிஸ் செய்தி பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்கிரமரத்னவினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காயத்தால் அவதியுறும் ஹேசில்வுட்
## எஞ்சிய போட்டிகளிலிருந்தும் விலகல்



இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்துள்ள அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி 4 டெஸ்ட் போட்டிகள் மற்றும் 3 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் ஆடி வருகிறது.

முதலில் நடைபெற்று வரும் டெஸ்ட் தொடரில் இதுவரை நடந்து முடிந்துள்ள 2 போட்டிகளிலும் இந்திய அணி வெற்றி பெற்று தொடரில் 2-0 என முன்னிலையில் உள்ளது.

இந் நிலையில், இந்தியாவுக்கு எதிரான எஞ்சிய 2 டெஸ்ட் போட்டிகளில் இருந்து அவுஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜோஷ் ஹேசில்வுட் விலக உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

அவருக்கு ஏற்பட்ட காயம் குணமாக இன்னும் சிறிது காலம் எடுக்கும் என்பதால் எஞ்சிய போட்டிகளில் இருந்து அவர் விலக உள்ளதாக தகவல் வெளியாகியது.

இந்தியாவுக்கு எதிரான தொடரில் ஆவுஸ்திரேலிய அணியில் இடம்பெற்றிருந்த ஹேசில்வுட் காயம் காரணமாக முதல் இரு டெஸ்ட் போட்டிகளிலும் ஆடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (4)

# மகளிர் உலகக் கிண்ணம்
# அரையிறுதிக்குள் இந்தியா



மகளிர் இருபது-20 உலகக் கிண்ணத் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் இந்தியா - அயரலாந்து அணிகள் மோதின. முதலில் ஆடிய இந்திய அணி 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட் இழப்புக்கு 155 ஓட்டங்கள் குவித்தது.

அதிரடியாக ஆடிய ஸ்மிருதி மந்தனா 56 பந்தில் 87 ஓட்டங்கள் விளாசினார். இதையடுத்து 156 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் அயர்லாந்து அணி களமிறங்கியது. முதல் பந்திலேயே தொடக்க வீராங்கனை அமி ஹன்டர் ரன் அவுட் ஆகி வெளியேறினார். அதே ஓவரின் 5 ஆவது பந்தில் ஓர்லா ஆட்டமிழந்தார்.

அதன்பின்னர் கேபி லெவிஸ், கப்டன் லாரா டெலானி நிதானமாக ஆடினர். 2 விக்கெட் இழப்பிற்கு 54 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் மழை குறுக்கிட்டதால் ஆட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

மழை நிற்காமல் தொடர்ந்து பெய்ததால் ஆடுகளம் ஈரப்பதமானது. எனவே, போட்டி கைவிடப்பட்டு, டக்வொர்த் லீவிஸ் முறைப்படி வெற்றி தோல்வியை முடிவு செய்தனர்.

அதன்படி இந்தியா 5 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. போட்டியின் சிறந்த வீராங்கனையாக ஸ்மிருதி மந்தனா அறிவிக்கப்பட்டார்.

இதன்மூலம் இந்திய அணி, உலகக் கிண்ண அரையிறுதிக்கு முன்னேறியது. பி பிரிவில் இங்கிலாந்து, இந்தியா தலா 6 புள்ளிகளுடன் முதல் இரண்டு இடங்களில் உள்ளன.

இந்தியாவின் லீக் ஆட்டங்கள் நிறைவு பெற்றன. இங்கிலாந்து கடைசி ஆட்டத்தில் பாகிஸ்தானை எதிர்கொள்கிறது. இப்போட்டியில் பாகிஸ்தான் வெற்றி பெற்றாலும் எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தாது. (4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2711

**யுவதாஷ்**

கடவுள் நல்லவங்கள தான் சோதிப்பாரு...



அது தான்டா நானும் கேக்குறேன். நான் அப்படி என்ன நல்லது செஞ்சுட்டேன்னு என்னைய போட்டு இப்படி சோதிக்கிறாரு...

**றியாஷினி**




**சுதன்**

கெல்மெற் போட்டதும் முடி கலஞ்சுடும்னு தெரிஞ்சும்



அரை மணி நேரமா கெயார் ஸ்டைல் பண்ணிட்டு இருக்கியேடா?

**முரளி**

உன்னை நீ நம்பத் தொடங்கிவிட்டால்...
உலகில் வெற்றியுடன் வாழக்
கற்றுக் கொண்டு விட்டாய் என்று பொருள்...



**கஸ்தூரி**

எப்பிடி டி வீட்ல எங்கட லவ்வ ஒத்துக்கொண்டாங்க?



வீட்டு கரண்ட் பில்ல நீங்க கட்டுவீங்கனு சொன்னேன்.

**கோபினா**

எதுவும் தாமதமாகி விடவில்லை,
இந்த இடத்தில் ஆரம்பித்தால் கூட
இன்னும் எவ்வளவோ உயரங்களுக்குப்
போய்விட முடியும்!



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி அறிவித்தல்

## வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்
## சபைநிதி வேலைத்திட்டம் 2023, கட்டம் I

01 தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறான வேலைகளுக்காகக் கோரப்படுகின்றது.

02 தேசிய போட்டி கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாக கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட03/2020(i)ஆம் இலக்க 11.01.2021 ஆம் திகதிய,04/2016(ii)ஆம் இலக்க 08.05.2019 ஆம் திகதிய, 04/2016(iii)ஆம் இலக்க 18.02.2021 ஆம் திகதிய மற்றும் 04/2016 (iv) இலக்க 09.02.2023 ஆம் திகதிய பொதுநிதிச் சுற்றறிக்கைகளுக்கு அமைவாக வடமாகாணத்தை சார்ந்தவருக்கும் மற்றும் வேண்டப்படும் உரிய தரத்தை கொண்டிருப்போருக்கும் முன்னுரிமையளிக்கப்படும்.

03 இல 1-24 வரையான கேள்விகளுக்கு கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி வீதி மற்றும் கட்டடம் புனரமைப்புக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

04 தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி5 இல்காட்டப்பட்டுள்ளது.

05 ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் வலிகாமம் தெற்கு பிரதேசசபை தலைமையலுவலகத்தில் (தொலைபேசி 021 224 0017) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் 22.02.2023 தொடக்கம் 07.03.2023 ஆம் திகதி வரை வேலைநாட்களில் மு.ப 9.00 மணிமுதல் 14.00 மணிவரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

06 ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் வலிகாமம் தெற்குபிரதேசசபை சுன்னாகம் எனும் இடத்திலிருந்து 22.02.2023 திகதியிலிருந்து 07.03.2023 ஆம் திகதி வரை வேலை நாட்களில் காலை 09.00 மணிக்கும் பி.ப 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.3000/- (வரி நீங்கலாக) இனை செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

07 பெறுகை ஆவணங்களினை இரு பிரதிகளில் தயாரித்து தனித்தனியாக இரு உறைகளில் இட்டு 08.03.2023 ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு தவிசாளர் ,பிரதேசசபை பெறுகைக் குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். காலம் தாழ்த்தப்பட்ட கேள்வி நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவுடைந்தவுடன் வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

08 கிடைக்கப்பெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியின் ஒருபகுதியினை மட்டும் ஏற்றுக் கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைக் குழுவிற்கு அதிகாரமுண்டு.

09 கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அமையும்.

| இல | வேலை விபரம், ஒப்பந்த இலக்கம் | மதிப்பீட்டுத் தொகை (Mn) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியில் இருந்து கேள்வி செல்லுபடியாகும் காலம் | | வேண்டப்படும் கேள்விப்பிணை செல்லுபடியாகும் காலம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | நாட்கள் | திகதி | தொகை | திகதி |
| 1 | மயிலங்காடு கருணாகரப்பிள்ளையார் வீதி குறுக்கு வீதி NP/14/41/15/02(05)/CF/2023/01 | 2.063 | 90 நாட்கள் | C9,C8& C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 10.05.2023 | 21,000.00 | 07.06.2023 |
| 2 | ஏழாலை கண்ணகி அம்மன் குறுக்கு வீதி, அன்னமார் வீதி மற்றும் ஏழாலை மத்தி காளி கோவில் குறுக்கு NP/14/41/15/02(05)/CF/2023/02 | 2.435 | 90 நாட்கள் | C9,C8& C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 10.05.2023 | 25,000.00 | 07.06.2023 |
| 3 | ஆலங்கட்டை பிள்ளையார் வீதி NP/14/41/15/02(05)/CF/2023/03 | 2.369 | 90 நாட்கள் | C9,C8& C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 10.05.2023 | 24,000.00 | 07.06.2023 |
| 4 | ஈவினை பிள்ளையார் வீதி மிகுதி வேலை மற்றும் விவசாய குறுக்கு வீதி. NP/14/41/15/02(05)/CF/2023/04 | 2.746 | 90 நாட்கள் | C9,C8& C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 10.05.2023 | 28,000.00 | 07.06.2023 |
| 5 | இலந்தையடி வீதி (மத்தாளோடை), மயிலங்காடு ஒன்றிய ஒழுங்கை மற்றும் பிரதான கொலனி வீதி 3ம்,4ம் கிளை வீதிகள் NP/14/41/15/02(05)/CF/2023/05 | 2.394 | 90 நாட்கள் | C9,C8& C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 10.05.2023 | 24,000.00 | 07.06.2023 |
| 6 | சைவமகாஜனா குறுக்குவீதி, சிவகுரு கடை வீதி. குப்பிளான் சந்திக்கு அருகாமையில் உள்ள கிளை வீதி மற்றும் குப்பிளான் மயிலங்காடு பிரதான வீதியின் குறுக்கு வீதி NP/14/41/15/02(05)/CF/2023/06 | 2.958 | 90 நாட்கள் | C9,C8& C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 10.05.2023 | 30,000.00 | 07.06.2023 |
| 7 | சூராவத்தை முத்துமாரி அம்மன் வெள்ளவாய்க்கால் இணைப்பு வீதி, இலங்கையர்கோன் குறுக்கு வீதி மற்றும் ஏழாலை வாசியசாலை வீதி கிளை வீதி NP/14/41/15/02(05)/CF/2023/07 | 2.136 | 90 நாட்கள் | C9,C8& C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 10.05.2023 | 22,000.00 | 07.06.2023 |
| 8 | நாகம்மாள் வீதி கட்டம் I NP/14/41/15/02(05)/CF/2023/08 | 3.521 | 90 நாட்கள் | C9,C8& C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 10.05.2023 | 36,000.00 | 07.06.2023 |
| 9 | கதிரமலை குறுக்கு வீதி (கலைவாணி சனசமூக நிலைய பின் வீதி) NP/14/41/15/02(05)/CF/2023/09 | 1.852 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 26.04.2023 | 19,000.00 | 24.05.2023 |
| 10 | கிணாமரம் 1ம் குறுக்கு வீதித்திருத்தம் மற்றும் தில்லைகட்டி குறுக்கு வீதி NP/14/41/15/02(05)/CF/2023/10 | 2.513 | 90 நாட்கள் | C9,C8& C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 10.05.2023 | 26,000.00 | 07.06.2023 |
| 11 | பிரதேச செயலக குறுக்கு வீதி மிகுதி வேலை மற்றும் கதிரமலை 3ம், 4ம் ஒழுங்கை NP/14/41/15/02(05)/CF/2023/11 | 1.771 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 26.04.2023 | 18,000.00 | 24.05.2023 |
| 12 | தம்பிமுத்து உபாத்தியாயர் 5ம் குறுக்கு வீதி, ஆறுமுகம் 1ம் குறுக்கு வீதி, கிணாமரம் 4ம் குறுக்கு வீதி மற்றும் சுலக்சன் வீதி NP/14/41/15/02(05)/CF/2023/12 | 1.314 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 26.04.2023 | 14,000.00 | 24.05.2023 |
| 13 | நாகம்மாள் வீதி கட்டம் II மற்றும் புளியடி வீதி 1ம் குறுக்கு வீதி NP/14/41/15/02(05)/CF/2023/13 | 2.525 | 90 நாட்கள் | C9,C8& C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 10.05.2023 | 26,000.00 | 07.06.2023 |
| 14 | அன்னமார் கோவில் வீதி NP/14/41/15/02(05)/CF/2023/14 | 1.116 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 26.04.2023 | 12,000.00 | 24.05.2023 |
| 15 | தம்மளை வீதி NP/14/41/15/02(05)/CF/2023/15 | 2.447 | 90 நாட்கள் | C9,C8& C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 10.05.2023 | 25,000.00 | 07.06.2023 |
| 16 | கருணாகரப்பிள்ளையார் வீதி கட்டம் NP/14/41/15/02(05)/CF/2023/16 | 2.869 | 90 நாட்கள் | C9,C8& C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 10.05.2023 | 29,000.00 | 07.06.2023 |
| 17 | மல்வம் வீதி மற்றும் மல்வம் குறுக்கு வீதிகள் மற்றும் மல்வம் சேமக்காலை வீதி குறுக்கு வீதி NP/14/41/15/02(05)/CF/2023/17 | 1.950 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 26.04.2023 | 20,000.00 | 24.05.2023 |
| 18 | சங்குவேலி பிள்ளையார் 2ம் குறுக்கு வீதி, வில்வக்குடையான் 3ம் குறுக்கு வீதி மற்றும் வில்வக்குடையான் 6ம் குறுக்கு வீதி. NP/14/41/15/02(05)/CF/2023/18 | 2.398 | 90 நாட்கள் | C9,C8& C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 10.05.2023 | 24,000.00 | 07.06.2023 |
| 19 | பட்டியோலை குறுக்கு வீதி, பூவோடை மயான கிளை வீதி மற்றும் மல்வம் 2ம் கிளை வீதி NP/14/41/15/02(05)/CF/2023/19 | 3.340 | 90 நாட்கள் | C9,C8& C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 10.05.2023 | 34,000.00 | 07.06.2023 |
| 20 | பத்தானை வீதி கட்டம் I NP/14/41/15/02(05)/CF/2023/20 | 2.869 | 90 நாட்கள் | C9,C8& C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 10.05.2023 | 29,000.00 | 07.06.2023 |
| 21 | அளவோடை கிளை வீதி மற்றும் தாவடி மானிப்பாய் கிளை வீதி NP/14/41/15/02(05)/CF/2023/21 | 1.793 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 26.04.2023 | 18,000.00 | 24.05.2023 |
| 22 | ஆசாரி வீதி உப ஒழுங்கை மற்றும் செட்டிவளவு உப வீதி NP/14/41/15/02(05)/CF/2023/22 | 2.721 | 90 நாட்கள் | C9,C8& C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 10.05.2023 | 28,000.00 | 07.06.2023 |
| 23 | பத்தானை வீதி கட்டம் II NP/14/41/15/02(05)/CF/2023/23 | 1.478 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 26.04.2023 | 15,000.00 | 24.05.2023 |
| 24 | Construction of Markct Building malvam and Improvement of Access path area at Maruthanarmadam public market NP/14/41/15/02(05)/CF/2023/24 | 2.234 | 90 நாட்கள் | C9,C8& C7 கட்டடப் புனரமைப்பு | 63 நாட்கள் | 10.05.2023 | 23,000.00 | 07.06.2023 |

10 கேள்வி தொடர்பான முதற் கூட்டம் வலிகாமம் தெற்கு பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் 28.02.2023 ஆம் திகதியன்று மு.ப 10.00 மணிக்கு நடைபெறும்.

[illegible], தவிசாளர், பெறுகைக்குழு,
வலிகாமம் தெற்கு பிரதேசசபை,சுன்னாகம்.

22.02.2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சதீவு அந்தோனியார் ஆலய திருவிழா நடைமுறைகள்

(யாழ்ப்பாணம்)

**கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழாவானது இம்முறை யாழ்ப்பாண மாவட்ட செயலாளரது ஒருங்கிணைப்பின் கீழ் யாழ்ப்பாண ஆயர் இல்லம், இலங்கை கடற்படை, நெடுந்தீவு பிரதேச செயலகம் மற்றும் சம்பந்தப்பட்ட சகல திணைக்களங்களினதும் முழுமையான ஒத்துழைப்புடன் மார்ச் 3 மற்றும் 4 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.**

இந் நிலையில் திருவிழா தொடர்பான தகவல்களை பொது மக்களுக்கு யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் அ.சிவபாலசுந்தரம் அறிவித்துள்ளார்.


அந்த வகையில் எதிர்வரும் 3 ஆம் திகதி காலை 5 மணி தொடக்கம் மு.ப 10 மணி வரை அரச பேருந்துகள் மற்றும் தனியார்.பேருந்துகள் யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்திலிருந்து குறிகட்டுவான் வரை சேவையில் ஈடுபடும்.

கச்சதீவுக்கான படகுச் சேவையானது குறிகட்டுவானில் இருந்து காலை 6 மணி முதல் மு.ப 11 மணிவரை சேவையில் ஈடுபடுத்தப்படும். குறிகட்டுவானில் இருந்து பயணிக்கும் ஒரு நபருக்கான படகிற்குரிய இரு வழிப் பயணக் கட்டணம் ரூ.2000 ஆகும்.

வெளி மாவட்டங்களிலிருந்து தமது சொந்தப்படகுகளில் திருவிழாவிற்கு செல்வோர் தமது வசிப்பிடங்களிற்கு அருகிலுள்ள கடற்படை முகாம்களில் தொடர்பு கொண்டு உரிய கடற்பயணப் பாதுகாப்பு அனுமதியினை பெற்றுக்கொள்வதுடன் அன்றைய தினம் பி.ப 6 மணிக்கு முன்னதாக கச்சதீவை வந்தடைவதற்கேற்றவாறு தங்களது பயணங்களை ஆரம்பிக்க வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மறுநாள் 4 ஆம் திகதி கச்சதீவு உற்சவத்தில் கலந்து கொள்ளும் பக்தர்களுக்கான காலை உணவானது இலங்கை கடற்படையினரால் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயமானது யாத்திரிகர்களின் புனித தலமாகவுள்ளதால் மது பாவனைப் பொருட்கள் கொண்டு செல்லுதல் மற்றும் பாவித்தல் என்பன முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-6-33)



அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் தொகுக்கப்பட்ட "சிங்கள எழுத்துக்கள்" மற்றும் "தமிழ் எழுத்துக்கள்" ஆகிய இரண்டு நூல்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று பாராளுமன்ற வளாகத்தில் இடம்பெற்றது. சர்வதேச தாய்மொழி தினத்தை முன்னிட்டு பிரதமர் தினேஷ் குணவர்தனவினால் இந்த நூல்கள் ஜனாதிபதிக்கு வழங்கி வைக்கப்பட்டன.

## சதுர்த்தி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண். வடகிழக்கு கலட்டி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம் சதுர்த்தி உற்சவம் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அபிஷேகம், மூல மூர்த்தி பூஜை, வசந்த மண்டபப் பூஜை நடைபெற்று விநாயகப்பெருமான் திருவீதி வலம் வருவார் என பிரதம குரு அறிவித்துள்ளார். (4-6)

## சுகாதார அனுமதியின்றி விற்பனை; 60 கிலோ இறைச்சி பறிமுதல்

(கரணவாய்)

வல்வெட்டித்துறை பகுதியில் இறைச்சி விற்பனை செய்யும் கடை ஒன்றில் சுகாதார அனுமதி பெறாது விற்பனைக்கு தயாராக இருந்த 60 கிலோ இறைச்சி நெல்லியடி பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இன்றைய தினம் பருத்தித்துறை நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (4-6-60)


## நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

நீர்வேலியூர் த.பரராஜசிங்கம் எழுதிய 'வளம் மிகுந்தது வலிகாமம் கிழக்கு' என்ற நூலின் வெளியீட்டு விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நீர்வேலி வடக்கு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.குணநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மேலதிக அரச அதிபர் ம.பிரதீபனும் சிறப்பு விருந்தினராக வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் சுபாஜினி மதியழகனும் கௌரவ விருந்தினராக வலிகாமம் கிழக்கு பிரதேச சபைச் செயலாளர் இ.பகீரதனும் கலந்து கொள்வர்.

நூலின் வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட பேராசிரியர் தி.வேல்நம்பியும் மதிப்பீட்டுரையை கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் ச.லலீசனும்வழங்குவர்.(4-6-33)



வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் இருநூறாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பல்வேறு நிகழ்வுகள் வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரியினரால் நேற்று சம்பிரதாயபூர்வமாக வெகு விமர்சையாக கல்லூரியின் அதிபர் ருஷிரா குலசிங்கம் தலைமையில் ஆரம்பித்து நடைபெற்றது. (படங்கள்:கஜிந்தன்)

## இராசிபலன்

22.02.2023
மாசி 10, புதன்கிழமை
துதியை முற்பகல் 9.49 மணிவரை
பூரட்டாதி முற்பகல் 10.17 மணிவரை
சுபநேரம் 5.01-6.31 மணிவரை
இராகுகாலம் 12.31-2.01 மணிவரை
சந்திராஷ்டமம் - மகம்
விபூதிப் புதன்
வளவன்

**மேஷம்**: நண்பர்கள் கடைசி நேரத்தில் கைகொடுத்து உதவுவர், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழில் ரீதியாக புதிய பொறுப்புக்கள் வந்த சேரலாம்.

**கடகம்**: மனதில் உற்சாகமும், மகிழ்ச்சியும் அதிகரிக்கும் நாள், மறதியால் விட்டுப்போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு.

**துலாம்**: தலைமைப் பதவிகள் உங்களைத் தேடி வரலாம், செய்தொழில் முன்னேற்றம் காண்பீர்கள், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**மகரம்**: தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், சேமிப்பில் அக்கறை காட்டுவீர்கள், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**ரிஷபம்**: பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், இனிய செய்திகள் இல்லம் வந்து சேரலாம், மனதில் இனம் புரியாத சந்தோசம் குடிகொள்ளும்,போசன சுகமுண்டு.

**சிம்மம்**: உறவினர்களின் மனக் கசப்பிற்கு ஆளாகாமல் பார்த்துக் கொள்வது நல்லது, நட்பொன்று பகையாகலாம், வழிபாட்டால் வளர்ச்சி கூடும் நாள், ரோக பயமுண்டு.

**விருச்சிகம்**: தூரத்து உறவினர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சுபசெய்திகள் வந்து சேரலாம், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, பிள்ளைகளின் நலனில் அக்கறை கூடும்.

**கும்பம்**: பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், பயணங்களால் பலனுண்டு, எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாய்ப்புண்டு, ஆரோக்கியத்தில் அக்கறை கூடும் நாள்.

**மிதுனம்**: குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், அரசு வழியில் அனுகூலமுண்டு, தொழில் வளர்ச்சி கூடும் நாள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**கன்னி**: குடும்பத்தினருடன் குதூகலம் தரும் பயணமொன்று இடம் பெறலாம், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு, கௌரவமான சம்பவங்கள் இடம்[illegible]

**தனுசு**: நண்பர்களால் நன்மைகள் நடைபெறலாம், பெற்றோர் மீது பிரியம் கூடும், மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**மீனம்**: புதியவர்களின் நட்பு கிடைக்கும், குடும்ப இரகசியங்களை மற்றவர்களிடம் சொல்லாதிருப்பது நல்லது, திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம்.

பலர் அறிவுரை பெறுகிறார்கள் ஆனால் சிலரே பயனடைகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.எம்.எப் கடன் வழங்கினாலும்

# பொருட்களின் விலை உயர்வு மாறாது

## இன்டர் பிரிட்டர் இணையத்தளம் தகவல்

(கொழும்பு)

**சீனாவின் கடன் மறுசீரமைப்பைப் புறந்தள்ளி இலங்கைக்குச் சர்வதேச நாணய நிதியம் கடனை வழங்கினால், பணவீக்கத்தின் வேகம் கட்டுக்குள் இருந்தாலும் உணவுப் பொருட்களின் விலைகள் தொடர்ந்து உயர்ந்து கொண்டே இருக்கும் என இன்டர் பிரிட்டர் இணையத்தளம் தெரிவித்துள்ளது.**

இலங்கைக்கு வழங்கிய கடனை இரண்டு வருடங்களுக்கு மாத்திரமே மறுசீரமைக்கச் சீனா இணங்கியுள்ள நிலையில், அந்த நாட்டின் உதவியில்லாமலேயே, இலங்கைக்கு அவசர நிதியுதவியை வழங்க, சர்வதேச நாணய நிதியம் ஆலோசனை மேற்கொண்டு வருகிறது.

எனினும், இந்த வசதியின் போது, சீனா, சர்வதேச நாணய நிதிய நிதியளிப்பு மற்றும் எந்த மறுசீரமைப்பு ஒப்பந்தத்திலிருந்தும் பயனடையக் கூடும்.

அதேநேரத்தில், மற்ற கடன் கொடுநர்களைக் காட்டிலும் கடன் நிவாரணத்தில் குறைவாகவே பங்களிக்கும் நிலை ஏற்படும் என்று இன்டர்பிரிட்டர் இணையத்தளம் குறிப்பிட்டுள்ளது.


இதேவேளை, இலங்கைக்குச் சர்வதேச நாணய நிதியம் வழங்கப் போகும் கடன், தற்போதைய பொருளாதார நெருக்கடியின் ஆழமான மனித செலவுகளை மாற்றியமைக்கச் சிறிதும் உதவாது.

பணவீக்கத்தின் வேகம் கட்டுக்குள் இருந்தாலும் உணவு விலைகள் தொடர்ந்து அதிகமாகவே இருக்கும்.

அதாவது, சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவி, இலங்கைக்கு ஒரு குறிப்பிட்ட அளவு நிதி சுவாசத்தை மட்டுமே உருவாக்கும் என்றும் அந்த இணையம் குறிப்பிட்டுள்ளது. (நி)

# பல்கலை சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்த மாட்டோம்

## புதுமுக மாணவர்களிடம் உறுதிமொழி சான்றிதழ்



(கொழும்பு)

மாணவர்களிடம் உறுதிமொழிச் சான்றிதழைப் பெற்று பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கும் புதிய திட்டம் ஆரம்பிக்கப்படும் என்று உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில், பல்கலைக்கழகத்தின் சொத்துகளுக்குச் சேதம் விளைவிக்க மாட்டோம், பல்கலைக்கழக வளாகத்தில் கலவரத்தை ஏற்படுத்தப் போவதில்லை என உறுதிமொழிச் சான்றிதழில் கையொப்பம் பெறப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உயர்தரத்தில் சித்தியடைந்து பல்கலைக்கழகத்தில் நுழைவதற்கான உரிமையின் அர்ப்பணிப்பு மற்றும் பொறுப்பு குறித்து மாணவர்களுக்கு எடுத்துரைக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இது ஒரு சமூக உடன்பாடு எனவும் ஒப்பந்தத்தை மீறும் மாணவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு உறுதிமொழியை மீறும் மாணவர்களின் பல் கலைக்கழக கல்வி இரத்து செய்யப்படும். (நி)

# தவக்காலம்-இறைவனுடன் ஒப்புரவாகும் காலம்




"காலங்கள் எல்லாம் கடவுளுடையன" என்று கிறிஸ்துவின் பாஸ்கா உயிர்ப்பு பலியில் தியானிக்கின்றோம். கடவுள் காலங்களை மனித தேவைக்கேற்பவும் அவனின் உளமாற்றத்திற்கென்றும் அமைக்கின்றார். "ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலமுண்டு" சபை உரையாடல் 3:18 இல் கூறப்பட்டுள்ளது.

இங்கு நாம் கடவுளின் அருளையும் இரக்கத்தையும் நிறைவாகப் பெறுவதற்கும் அவருடன் நல்லுறவை கட்டியெழுப்ப வேண்டும் என்றும் காலத்தை நமக்கு அளித்துள்ளார்.

தவக்காலம் நம் மனதை தூய்மைப்படுத்தும் காலமென்றும் தயாரிப்பு காலமென்றும் பங்கேற்பு காலமென்றும் அழைத்தாலும் இறைவனின் கல்வாரி பாடுகளில் பயணிக்க நாம் அழைக்கப்பட்டுள்ளோம்.

பரிசுத்த விவிலியத்தில் "நாற்பது" என்ற எண்ணில் பல சிறப்பான நிகழ்வுகளை சுட்டிக்காட்டப்படுகிறது.

I. நோவா காலத்தில் நாற்பது இரவும் நாற்பது பகலும் மழை பெய்தது. நோவா குடும்பம் காப்பாற்றப்பட்டது. (தொ.நூ 7:17-18)

II. தேர்ந்தெடுக்கப்பட்ட இஸ்ரயேல் மக்கள் பாலைவனத்தில் நாற்பது ஆண்டுகள் பயணம் செய்தது. (எண் ஆகமம் 32:13)

III. மோயீசன் சீனாய் மலையில் நாற்பது நாட்கள் தங்கியிருந்தார். (வி.பி 24:18)

IV. எலியா நாற்பது நாட்கள் உண்ணாமல் பாலைவனத்தில் பயணம் செய்தது. (1 அர 19:18)

V. இஸ்ரயேல் மக்களின் பாவச் சுமையை எசேக்கியேல் இறைவாக்கினர் நாற்பது நாட்கள் சுமந்தார். (எசே 4:6)

VI. இயேசு நாற்பது நாட்கள் இரவும் பகலும் பாலைவனத்தில் நோன்பு இருந்தார். (மத் 4:2)

இங்கு நாற்பது நாட்கள் அல்லது ஆண்டுகள் என்பது மணிக் கணக்கையோ அல்லது நேரக் கணக்கையோ குறிப்பதல்ல. மாறாக இறைவன் வழங்கிய அருளின் காலத்தை சுட்டிக் காண்பிக்கிறது.

திருநீற்று புதன் ஆகிய இன்று ஆரம்பமாகின்றது. எனவே தான் புனித பவுல் அடிகள் கூறுகின்றார் "இதுவே தகுந்த காலம்" (2கொரி 6:2). இது நம்முடைய மீட்பை குறித்தும் வாழ்வின் நிலையாமையை மனதில் கொண்டு நம் வாழ்வை இறைவன் பால் எழுப்ப அழைப்பு விடப்படுகின்றது. நமது வாழ்வில் கடந்து வந்த பாதையில், சந்தித்த மனிதர்களில் இறை சாயலை காண மறுத்தும் சுயநல உணர்வுடன் சமூகத்தில் வாழ்ந்த சந்தர்ப்பங்களை நினைவுபடுத்தியும் இறைவனுடன் ஒப்புருவாக்க அழைக்கின்றோம். எனவே நாமும் நம்மை சுய ஆய்வுக்குட்படுத்தி நமக்கும் கடவுளுக்கும் நாம் வாழும் சமூகத்தின் மக்களுடனும் நல்லுறவை ஏற்படுத்தி இவ்வருளின் காலத்தை பயனுள்ளதாக்குவோம்.

அருள்நேசன்,
குருநகர்.

வலிகாமம் தெற்கு பிரதேச சபை-சுன்னாகம்

ஏலவிற்பனை

வலிகாமம் தெற்கு பிரதேச சபைக்குரிய பின்வரும் பாவித்த பொருட்கள் பகிரங்க ஏலத்திற்கு விற்கப்படவுள்ளன.

காலம் : 01.03.2023 புதன்கிழமை காலை 10.00 மணி
இடம் : **தலைமை அலுவலகம், வலி. தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்**

**பொருட்கள் விபரம்**

இலத்திரனியல் பொருட்கள், வாகன பற்றிகள், உலோகப் பொருட்கள், மின்னியல் பொருட்கள், தளபாடப் பொருட்கள், வாகன பழைய பொருட்கள், ரயர்கள் மற்றும் வெற்றுத் தார் பரல்கள்.

**நிபந்தனைகள்**

1. ஏலதாரராக கலந்து கொள்பவர் ரூபா 100.00 மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக செலுத்துதல் வேண்டும். மு.ப 10.00 பின்னர் ஏலதாரர் பதிவுகள் மேற்கொள்ளப்படாது.
2. சித்தியடைந்த ஏலத்தார் ஒப்புக் கொண்ட ஏலத்தொகை முழுவதையும் செலுத்திப் பொருட்களை அன்றைய தினமே அலுவலகத்தில் இருந்து அகற்றுதல் வேண்டும்.
3. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம் தொலைபேசி இலக்கம் 021 224 0017

**க.தர்சன்,**
**தவிசாளர்,**
**வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.**

(C-6021)

கரைச்சி புளியம்பொக்கனை நாகதம்பிரான்
ஆலய வருடாந்த பங்குனி உத்தரப் பொங்கலின் போது
ஒளி/ஒலி சேவை வழங்கல்

கரைச்சி புளியம்பொக்கனை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பங்குனி உத்தரப் பொங்கல் எதிர்வரும் 05.04.2023ஆந் திகதி வழமை போன்று சிறப்பாக நடைபெறவுள்ளது பொங்கல் உற்சவ காலத்தில் ஒளி/ஒலி சேவை வழங்க ஆர்வமும் இயலளவும் உடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. ஆர்வமுள்ளவர்கள் தங்களது மின் பிறப்பாக்கிகளின் கொள்ளளவு சேவை வழங்கக்கூடிய ஆகக்கூடிய மின் குமிழ்களின் அளவுகள் மற்றும் அனுபவம் என்பவற்றை உள்ளடக்கிய வகையில் விண்ணப்பங்களை எதிர்வரும் 04.03.2023ஆந் திகதிக்கு முன்னர் தலைவர் கரைச்சி புளியம்பொக்கனை நாகதம்பிரான் ஆலயம், புளியம்பொக்கனை, பரந்தன் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**மேலதிக விபரங்கள் தேவைப்படின் பின்வரும் இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும். 0762956869/0773179847**

**ஆலய பரிபாலன சபை,**
**கரைச்சி புளியம்பொக்கனை நாகதம்பிரான் ஆலயம்,**
**புளியம்பொக்கனை.**

(C-6020)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துருக்கியில் மீண்டும் நிலநடுக்கங்கள்
# 3 பேர் உயிரிழப்பு, 213 பேர் காயம்!

## இடிபாடுகளுக்குள் சிக்கியவர்களை மீட்கும் பணிகள் தீவிரம்

(அங்காரா)

**துருக்கியில் இரண்டு புதிய நிலநடுக்கங்கள் ஏற்பட்டு சுமார் மூன்று பேர் உயிரிழந்ததை அடுத்து, இடிபாடுகளுக்குள் சிக்கியவர்களை மீட்கும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.**

மேலும், 213 பேர் காயமடைந்துள்ளதாக துருக்கியின் பேரழிவு மற்றும் அவசரகால நிறுவனம் தெரிவித்துள்ளது.

சிரியாவின் எல்லைக்கு அருகில் தென்கிழக்கில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை 6.4 ரிக்டர் அளவுகோலில் நிலநடுக்கம் ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து மூன்று நிமிடங்களுக்குப் பிறகு 5.8 ரிக்டரில் நிலநடுக்கம் ஏற்பட்டது.

மூன்று மரணங்களும் அன்டாக்யா, டெஃப்னே மற்றும் சமந்தாக் ஆகிய இடங்களில் நிகழ்ந்துள்ளன என்று உள்துறை அமைச்சர் சுலேமான் சோய்லு கூறினார், மேலும், ஆபத்தான கட்டடங்களுக்குள் நுழைய வேண்டாம் என்று மக்களை வலியுறுத்தினார்.

பெப்ரவரி 6 ஆம் திகதி துருக்கி மற்றும் சிரியாவை அழித்த



பாரிய நிலநடுக்கங்களால், வலுவிழந்த கட்டடங்கள் இரு நாடுகளிலும் இடிந்து விழுந்தன. (நி)

# ஜேர்மனி ஜனாதிபதி இந்தியா வருகை



(பேர்லின்)

ஜேர்மனி ஜனாதிபதி ஒலப் ஸ்கோல்ஸ், இரண்டு நாட்கள் அரசு முறை பயணமாக இந்த வார இறுதியில் இந்தியா வருகை தரவுள்ளார்.

எதிர்வரும் 25 ஆம் திகதி இந்தியா வரும் ஒலப் ஸ்கோல்ஸ் இந்திய பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது இருநாட்டு தலைவர்களும் வர்த்தகம், இருநாட்டு உறவு உட்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து ஆலோசிக்க உள்ளனர். (நி)

# உக்ரைன்- ரஷ்ய யுத்தம் ஆரம்பித்து ஒரு வருடம் நிறைவு

## உக்ரைனுக்கான ஆதரவை மீண்டும் வெளிப்படுத்தவுள்ள பாரிஸ்

(பாரிஸ்)

உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு தொடங்கி ஒரு வருடம் கடந்துள்ள நிலையில், தொடர்ந்தும் போர் இடம்பெற்று வருகின்றது.

இந்நிலையில், நாளை வியாழக் கிழமையுடன் ரஷ்ய-உக்ரைன் யுத்தம் ஆரம்பித்து ஒரு வருடம் நிறைவடையவுள்ளது.

ஐரோப்பிய நாடுகள் பல உக்ரைனுக்கு ஆதரவு வழங்கி வரும் நிலையில், பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் உள்ள ஈபிள் கோபுரத்தின் மின் விளக்கானது உக்ரைனின் கொடி நிறத்தில் ஒளிரவிடப்படவுள்ளது.

குறித்த ஈபிள் கோபுரத்தின் விளக்குகள் நீலம் மற்றும் மஞ்சள் ஆகிய உக்ரைனின் தேசியக் கொடி நிறத்தில் ஒளிரவுள்ளது. என பாரிஸ் நகர முதல்வர் ஆன் இதால்கோ தெரிவித்தார்.

போர் ஆரம்பித்து ஒரு வருடம் கழிந்தாலும் உக்ரைனிய மக்களுக்காக பாரிஸின் அசைக்க முடியாத ஆதரவை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது என ஆன் இதால்கோ தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார். (நி)

# உக்ரைன் தலைநகருக்கு பைடன் திடீர் விஜயம்

## உக்ரைனுக்கு ஆதரவாக இராணுவ உதவிகளையும்

## ரஷ்யாவுக்கு எதிராக பல தடைகளையும் அறிவித்தார்

(கீவ்)

உக்ரைன் தலைநகருக்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் எதிர்பாராத விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்.

உக்ரைனிற்கான தனது உறுதியான ஆதரவை வெளிப்படுத்துவதற்காக உக்ரைனிற்கு விஜயம் மேற்கொண்டுள்ளதாக தெரிவித்துள்ள ஜோ பைடன் உக்ரைனிற்கு புதிய இராணுவ உதவிகளை அறிவித்துள்ளார்.

தனது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த விஜயத்தின் போது ஜோ பைடன் ரஷ்யாவிற்கு எதிராக தடைகளையும் அறிவித்துள்ளார்.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஈவிரக்கமற்ற ஆக்கிரமிப்பை நினைவுகூருவதற்கு உலகம் தயாராகிக் கொண்டிருக்கின்ற நிலையில் நான் ஜனாதிபதி ஜெலென்ஸ்கியை சந்திப்பதற்கும் உக்ரைனின் ஜனநாயகம் இறைமை ஆள்புல ஒருமைப்பாடு ஆகியவற்றிற் [illegible] ஆதரவை வெளிப்படுத்துவதற்காகவும் நான் உக்ரைன் தலைநகருக்கு



விஜயம் மேற்கொண்டுள்ளேன்.


புடின் ஒரு வருடத்திற்கு முன்னர் தனது தாக்குதலை ஆரம்பித்த வேளை உக்ரைன் பலவீனமாகயிருக்கின்றது மேற்குலகம் பிளவுபட்டுள்ளது என நினைத்தார். எங்களை தோற்கடிக்க முடியும் என கருதினார்.

ஆனால் அவர் நினைத்தது முற்றிலும் தவறாகி விட்டது என பைடன் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## பனை தரும் போசாக்கு உணவுகள்



பனையில்ஆண்மரமும்பெண் மரமும் காணப்படும். ஆண் பனையில் பாளையில் இருந்து கதிர்கள் நீண்டு திரண்டிருக்கும். அவற்றினின்றும் சிறு ஆண் பூக்கள் விரியும். பூவில் தடித்த புற விதழ்களும் 3 அகவிதழ்களும் 6 மகரந்த கால்களும் தோன்றும்.

பெண் பனையில் பாளையில் இருந்து பட்டையாக 3 புறவிதழ்களும் 3 அகவிதழ்களும் கோள வடிவான பெண்ணகத்தை கொண்டிருக்கும்.

இதுபோல மகரந்தச் சேர்க்கையின் பின்னர் பிஞ்சாகி பனங்காயாகும். இளங்காயிலுள்ள 3 நுங்குகளும் முற்றி விதைகளாகி விடும். காய் முற்றிப் பழமான பின்னர் பனம்பழம் தானே விழும். அதற்குள் மூன்று விதைகள் இருக்கும். சேரமன்னரின் குடியிருப்பு பனை என்பர். இவ்வளவு பழைமை வாய்ந்த பனைமரம் இன்னும் பயன்கொடுத்துக் கொண்டே உள்ளது.

அதிலும் உணவு வகைகளில் மட்டுமின்றி இயற்கை மருந்துணவாகவும் அமைவதை இன்றைய விஞ்ஞானமும் ஏற்றுக் கொண்டுள்ளது. பனையில் ஆண் மரமும் பெண் மரமும் தனித்தனியாக வளரும். இருவகை மரமும் பலவகையில் பயன்படுமாகிலும் ஆண்பனை, பெண்பனைபோன்று அத்துணை பயன்தரவல்லது அன்று. பெண் பனை மரத்தில் இருந்து இறக்கும் கள்ளிற்கு பதநீர் என்று பெயர். இதனைக் காய்ச்சி பனைவெல்லம், பனங்கற்கண்டு முதலியவற்றை பெறலாம். இவை மருத்துவப்பண்புகள் நிறைந்தவை.பனையில் இருந்து பெறப்படும் நுங்கு, ஒடியல், பனங்கிழங்கு, புழுக்கொடியல், பூரான், பனங்கட்டி, பனம்பழம் போன்ற அனைத்துமே போசாக்கான ஆரோக்கிய உணவாகும்.

குடலைச் சுத்தம் செய்வதில் ஒடியற்கூழுக்கு முக்கிய பங்குண்டு. பொதுவாக ஒடியற்கூழ் பசியைத் தணிப்பதுடன் போசாக்கு மிக்கதாகவும் விளங்குகிறது. மலத்தை இளக்கி நன்கு வெளியேற்றும். எனவே இக்கூழை இடையிடையே தயாரித்து பருகி வருவதால் மலம் நன்கு வெளியேறி வாதம் முதலிய தோஷங்கள் நீங்கி சமநிலை பேணப்படுவதால் மூன்று தோஷங்களின் சமநிலை பேணப்பட்டு சரீர ஆரோக்கியமும் பேணப்படும்.

இன்றைய விஞ்ஞான ஆய்வுகள் கூட நார்த்தன்மையான உணவுகள் உணவுக்கால்வாயில் புற்று நோய் ஏற்படுவதைத் தடுக்கின்றது என்பதை வலியுறுத்துகின்றது. ஒடியல் மாவில் தேவையான அளவு நார்ச்சத்து உள்ளது என்பது குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும். கோடை காலத்திற்கு ஏற்றது பதநீர்.

இக்காலங்களில் ஏற்படும் சின்னமுத்து, பொக்குளிப்பான் போன்ற நிலைமைகளில் உணவுக்கால்வாய் சளிச்சவ்வுகளிலும் வாயிலும் ஏற்படும் புண்பாட்டிற்கு அருமருந்தாக அமையும். பதநீரில் உயிர்ச்சத்து B, இரும்புச் சத்து என்பன அதிகம் உண்டு. குளிர்ச்சியான பாணம் மட்டுமல்ல போசாக்கு மிக்கதாகும்.

வெப்ப காலமாகிய சித்திரை, வைகாசி மாதங்களில் நுங்கு கிடைக்கிறது. இது உடல் உஷ்ணத்தை தணித்து உடலுக்கு குளிர்ச்சியை கொடுக்கக் கூடியது. அதிகரித்த பித்தத்தை சமப்படுத்தும். எம் மக்கள் பனம்பழத்தைச் சுட்டு அதன் மஞ்சள் நிறக்களியை உண்பர். இதில் உயிர்ச்சத்து A இன் முன்னோடியா பீற்றா கரோட்டின் காணப்படுவதால் கண்பார்வை தெளிவாவதுடன் தோலினை மென்மையாகவும் தொற்றுக்கள் ஏற்படாமலும் பாதுகாக்கிறது.

அத்துடன் நோய் எதிர்ப்பாற்றலை அதிகரிக்கவும் செய்யும். மலத்தையும் இலகுவாக வெளியேற்ற உதவும். பனங்களியிலிருந்து தயாரிக்கப்படும் பனங்காய் பலகாரத்தில் கல்சியம், பொஸ்பரஸ், இரும்பு, உயிர்ச்சத்து C ஆகிய சத்துக்கள் அடங்கியிருப்பதால் உடலின் உள் உறுப்புகளின் ஆரோக்கியத்துக்கு உதவுகிறது. பனங்காய் பணியாரம் தாயாரிக்கும் போது அரிசிமா, கோதுமை மாவிற்கு பதில் சாமையரிசி மாவை பயன்படுத்தினால் இலகுவாக சமிபாடு அடைவதுடன் இரத்தத்தில் கொலஸ்ரோலின் அளவை அதிகரிக்கவிடாமல் சீராக பேணவும் உதவும். பனங்கட்டி சத்துமிக்க ஒரு உப உணவாகும். பனங்கட்டியில் கல்சியம், பொஸ்பரஸ், இரும்புச்சத்து, உயிர்ச்சத்து B, பொட்டாசியம் ஆகியன அதிகளவில் காணப்படுகின்றன. எனவே தான் பனங்கட்டியை பயன்படுத்தி ஆடிக்கூழ், சிறுவர்களுக்கான கஞ்சி வகை, எள்ளுப்பாகு போன்றன தயாரிக்கப்படுகின்றன. பனங்கட்டி பாலூட்டும் தாய்மார், கர்ப்பிணிப் பெண்களுக்கு சிறந்ததும் அவசியமானதுமாகும்.

எனவே எம் மக்கள் சீனிக்குப் பதில் பனங்கட்டியைப் பயன்படுத்தப் பழகிக் கொள்ளல் மருத்துவ நோக்கில் ஆரோக்கியமாகும். எனவேதான் சித்த மருந்துகளுக்கு அதிகமாக பனங்கட்டி அனுபானமாகக் கொடுக்கப்படுகிறது. பனங்கட்டியில் தாழ்த்தப்படாத வெல்லம் (Non reducing sugar) கூடுதலாக இருப்பதால் நோயிலிருந்து விடுபட்டு உடல்தேறி வருபவர்களுக்கு பருக்கும் கொத்தமல்லித் தண்ணீர், கற்பூரவள்ளிச் சாறு போன்றவற்றில் பனங்கற்கண்டு அனுமானத்தில் வழங்கப்படுகிறது.

இது குழந்தைகட்கு மலக்கட்டு, சளி என்பன ஏற்படாமல் பாதுகாக்கின்றது.

புழுக்கொடியல் மாவை சத்துமா போன்றும் பயன்படுத்தலாம்.



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

புழுக்கொடியல் மா, தேங்காய்ப்பூ, பனங்கட்டி சேர்த்து குழைத்து பிடித்து பயன்படத்தலாம்.

இது விசேடமாக முதியோருக்குகந்த சத்துணவாகும். புழுக்கொடியலில் கல்சியம், பொசுபரசு, இரும்புச்சத்து கணிசமான அளவு உண்டு. மற்றும் பனங்குருத்தில் கல்சியம், பொசுபரசு, இரும்புச்சத்து, பீற்றா கரோட்டின் போன்ற சத்துக்கள் அதிகம் காணப்படுகின்றன.

பனம்விதையிலுள்ள பூரானை பயன்படுத்தி பூரான் புட்டும் அவித்துச் சாப்பிடலாம். தேங்காய்ப் பூவுக்குப் பதிலாக பூரானை சிறு சிறு குறுகலாக அரிந்து புட்டு மாவுடன் சேர்த்து அவித்து சாப்பிடலாம்.

பூரானில் புரதச்சத்து, கல்சியம், பொசுபரசு, இரும்புச் சத்து காணப்படுவது குறிப்பிடக் கூடிய விடயமாகும். தமிழ் மக்களின் போசாக்குணவுகளிலும் பொருளாதாரத்திலும் மிகவும் முக்கியம் வாய்ந்தவை பனையிலிருந்து கிடைக்கும் உணவாகும்.

# ஒருதரம் பயன்படும் பிளாஸ்ரிக்கிற்கான தடை: மாற்றம் முதலில் எம்மிலிருந்து

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

2. சந்தையில் மரக்கறி பயிர்களை வாங்கும் போது அவசியமற்று அவற்றை பயன்படுத்துவதற்கு முறையான கட்டுப்பாடு அவசியம். மலிவாக கிடைக்கின்றது என்பதற்காக நாம் எதற்கும் சொப்பிங்பையினை பயன்படுத்துதல் ஆகாது. துணிப்பையினை பயன்படுத்துவது எமக்கும் நல்லது நாம் வாழும் சூழலுக்கும் நல்லது. இது ஒன்றும் கடினமான வேலையில்லையே. இதனை பழக்கப்படுத்திக் கொண்டால் அதுவே நாளடைவில் எமக்குப் பழக்கமாகி விடும். கத்தரிக்காயுக்கும் தக்காளிக்கும் வெண்டிக்காயுக்கும் இன்னும் பூசணிக்கும் சொப்பிங்பை எதற்கு? துணிப்பையிலோ அல்லது சாக்குப் பையிலோ நாம் பெற்றுக் கொள்ளலாம். சந்தையில் மரக்கறி பயிர்களை விற்பவர்களின் கருத்துப்படி ஒவ்வொரு சிறிய பொருளுக்கும் சொப்பிங் பையில் போட்டுத் தரும்படி வாங்குபவர்கள் கேட்பதனால் அவர்களுக்காக சொப்பிங்பையினை பயன்படுத்த வேண்டியிருக்கின்றது. மற்றையபடி எமது வாடிக்கையாளர்களுக்கு தகுந்த விளக்கம் அளிக்கப்பட்டால் அவர்களை அறிவூட்டினால் சொப்பிங்பையின் பாவனையை வெகுவாக சந்தைப் பகுதிகளில் கட்டுப்படுத்திக் கொள்ளலாம்.

3. தற்போது வெள்ளை நிறத்தில் அது என்னவோ உக்கிவிடும் என புதிதாக சொப்பிங்பை அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றது. அதுவும் பொலித்தீன் வகையென்பதனால் குறிப்பிட்ட காலம் பிரிந்தழிவதற்கு எடுக்கும். ஆதலால் சொப்பிங்பை எதுவென்றாலும் அவற்றை அளவுடன் தேவைக்கேற்ப பயன்படுத்துவது எல்லோரினதும் கடமையாகும். எமது சூழலுக்காக இதனைக் கூட செய்யவில்லையாயின் பின்னர் எதனைச் செய்யப் போகின்றோம்.

4.சொப்பிங்பையில் சமையலறை மற்றும் வீட்டுக்கழிவுகளை எடுத்துச் சென்று வீதியில் விசிறுவதைத் தவிர்க்க வேண்டும். யாழ். மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் இவ்வாறாக செப்பிங்பைகளில் வீட்டுக் கழிவுகளை உள்ளடக்கி வீதியில் எறிந்து விட்டு செல்வதை நாம் எப்போது நிறுத்தப் போகின்றோம்? வீடு சுத்தமாக இருக்க வேண்டும் என்பதற்காக கழிவுகளை வீதியில் கொட்டிவிடலாமா? அவ்வாறு கொட்டப்பட்டதை மாநகர சுத்திகரிப்பாளர்கள் சேகரிக்க முன்னர் வீதியில் வலம்வரும் குடியிருக்கும் நாய்கள் அவற்றை பிய்த்து வீதியெங்கும் பரவி விட்டிருப்பதனை தினமும் தான் நாம் பார்த்து முகத்தைச் சுழித்து விட்டு செல்கின்றோம். அதிலும் பாடசாலைப் பிள்ளைகள் எமது பிள்ளைகள் சுத்தமாக உடையணிந்து இவ்வாறான அசிங்கங்களைப் பார்த்து அதன்மேல் நடந்து செல்வதனையும் நாம் கவனிக்கத் தவறவேயில்லை அல்லவா. எப்போது இதனை சீர் செய்யப் போகின்றோம். நாய்களையும் கட்டுப்படுத்த முடியாமல் திணறும் நாங்கள் இந்தக் குப்பைகளையும் எவ்வாறு கட்டுப்படுத்தப் போகின்றோம்? இதற்கு நிச்சயமாக முடிவு காணப்படல் வேண்டும். சுத்தமான பிரதேசமாக என்று எமது பிரதேசத்தை மாற்றிக் காட்டப் போகின்றோம். குப்பைகளை எறியாமல் விட்டாலே பிரதேசம் சுத்தமானதாக மாறிவிடும். அதிலும் இந்தக் கழிவுகளில் அநேகமானவை சேதனக் கழிவுகளென்றாலும் சில நேரங்களில் மனிதக் கழிவுகளும் இருப்பதாக பலர் கூறிக் கொள்கின்றார்கள். எமக்கு எந்த மாதிரியான விடிவு வேண்டும் என்பதனை நாங்கள் முன் கூட்டியே தெரிந்து கொள்வது நல்லது. இருப்பதை வைத்து அதனை சுத்தமானதாக் சுகாதாரமானதாக பாவிக்கத் தெரியாத நாங்கள் வேறு என்ன கிடைத்தாலும் மீண்டும் இந்தக் குப்பை வாழ்வுக்குத் தானே வழிசமைக்கப் போகின்றோம். ஆக மொத்தத்தில் மனதளவில் மாற்றம் வேண்டும். மற்றையவர் என்ன செய்கின்றார் என்பதற்கு முதல் நான்.நாம் என்ன செய்கின்றோம் என்பதற்கு விடை கண்டாக வேண்டும்.

5.குடிநீர் அடைக்கப்பட்டு வரும் போத்தல்களில் தெரிந்தும் நீரைச் சேமித்துக் குடிப்பதற்காக பயன்படுத்துவது நல்லதல்ல என அறியப்படுகின்றது. இவ்வாறு குடிப்பதனால் ஏற்படும் சுகாதார சீர்கேட்டினை நாம் முழுமையாக தடுத்து, தவிர்த்து இளையவர்களுக்கு நல்ல வழியைக் காட்டுதல் வேண்டும். குடிநீரை சேமித்து வைத்திருப்பதற்கான குறிப்பிட்ட பிளாஸ்ரிக் கொள்கலன்களில் நீரை சேமிக்க வழிசெய்து கொள்ளலாம்.

6.பொதுவாகவே நாம் பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் போன்ற பொருட்களின் பாவனையை குறைப்பதற்கான நடவடிக்கைகளை நாமாகவே எடுக்கத் தொடங்கினால் நிச்சயமாக நாம் நினைக்கும் மாற்றத்தினை செய்து காட்டலாம். அழகுக்காக பிளாஸ்ரிக் பூக்களையும் செடிகளையும் வீட்டில் வாங்கி குவித்துக் கொண்டிருக்கின்றோம்.

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...



அதைவிடுத்து உயிருள்ள தாவரங்களையும் பூக்களையும் வீட்டில் வையுங்களேன். தினம் தினம் மாற்றமடையும் இத் தாவரங்களை பார்க்கும் போது சிறுவர்களின் உணர்விலும் நிச்சயமாக மாற்றம் ஏற்படும். இதற்காகத் தானே வீட்டுத்தோட்டமும் வீடுகளில் அழகுக்காக உயிருள்ள தாவரங்களையும் வைத்திருக்க வேண்டும் எனக் கூறுகின்றோம். அழகு என்பது உயிருடன் கலந்தது. உயிருள்ள பொருளில் இருக்கும் அழகே தனி. எமது உடலுக்கு உயிரிருக்கும் வரைதான் அதற்கு மதிப்பு. நாம்இந்த அழகான பெயரை வைத்திருப்பதற்கும் சொந்தம் கொண்டாடுவதற்கும் எமது உடலில் உயிரிருக்க வேண்டும். இந்த உயிர் போய்விட்டால் உடலை ஒருமையாக்கி அதற்கு பிணம் என்று உடனேயே பெயரிட்டு விடுகின்றோம். எந்த பிணமும் அழகாக இருக்கின்றதென்று எவரும் பெருமைப்பட்டுக் கொள்வதில்லை. புரிந்து கொள்ளுங்கள். உயிருக்கு விலையதிகம். ஒவ்வொரு உயிருக்கும் மதிப்புக் கொடுங்கள்.

மாற்றத்தை விரும்பும் எம்மினிய உறவுகளே! இன்றிலிருந்து பொலித்தீன். சொப்பிங்பை. பிளாஸ்ரிக் என்பனவற்றை பயன்படுத்துவதை நாமாகவே குறைப்போமா? தவிர்ப்போமா? எமது கடமையை நாம் செய்யாது விட்டாலும் குற்றம் குற்றமே. ஒவ்வொருவரினதும் உள் மனது நினைத்து விட்டால் எவராலும் இதனை மாற்ற முடியாது. ஆக மொத்தத்தில் மாற்றம் எம்மிடமிருந்து முதலில் வர வேண்டும். இது கழிவுகளை உக்க வைப்பதற் காக மட்டும் அல்ல. எமது வாழ் வியலை நிர்ணயம் செய்வதற் குமாகும். எம்மிடமுள்ள கழிவுகளை அகற்றுவதற்கும் இவ்வாறான மாற்றம் அவசியம் தேவை.



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி தேர்தலை ஒத்திவைத்தால் பாதிக்கப்படுவது பொதுமக்களே

## சுரேஷ் பிரேமச்சந்திரன் சுட்டிக்காட்டு

**(யாழ்ப்பாணம்) உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்தி வைப்பதால் பெரிதும் பாதிக்கப்படுவது பொதுமக்களே என ஈழ மக்கள் புரட்சிகர முன்னணியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.**

நேற்று ஊடகங்களுக்கு அனுப்பிய அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மக்களின் ஜனநாயக அடிப் படை உரிமைகளைப் பாது காத்து கிராம மட்ட நிர்வாக ங்களை மக்களேகொண்டு நட த்துவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டிய அரசா ங்கமும் ஜனாதிபதியும் குறுகிய அரசியல் இலாப நோக்கங்களு க்காக தேர்தலை நடத்த விடா மல் செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மறை முகமாகச் செயற்படுத்தி தேர் தலை காலவரையறையின்றி ஒத்திவைக்கும் நடவடிக்கை களை மேற்கொண்டிருப்பது டன், நிறைவேற்று அதிகார முள்ள ஜனாதிபதி தனக்கும் தேர்தலுக்கும் சம்பந்தமில்லை என்ற சாரப்பட நடந்தமையா னது தேர்தல் தொடர்பில் மக் கள் அவநம்பிக்கை அடைவதற் கும் ஜனநாயகத்தின் மீதான மக்களின் நம்பிக்கையை சீர்குலைப்பதற்கும் தான் சமீப த்திய நடவடிக்கைகள் வழி வகுத்திருக்கின்றன.

நாடு மிக மோசமான பொரு ளாதார நெருக்கடியில் சிக்கி யிருக்கக்கூடிய இந்நேரத்தில், நடத்த முடியாத, நடக்காத தேர்தல் ஒன்றிற்குகணிசமான அளவு நிதியை எவ்விதப் பய னுமின்றிச் செலவிட்டமையா னது,அரசாங்கத்தினுடைய பொறுப்பற்ற, அறிவு முதிர்ச்சி யற்ற, தேசப்பற்றற்ற தன் மையை எடுத்தியம்புகிறது.


மேற்கண்ட செயற்பாடுகள் உங்களிடம் கிஞ்சித்தும் நிர் வாகத்திறன் இல்லை என் பதையும் ஜனாதிபதி கதிரை யில் இருப்பதற்கு நீங்கள் தகுதி யுடையவர் தானா என்ற கேள் வியையும் எழுப்புகின்றது.

தேர்தல் ஆணையத்தின் எழுந்தமானமான தேர்தல் குறித்த அறிவிப்பினைத் தொடர்ந்து, 800இற்கும் மேற்ப ட்ட அரச உத்தியோகத்தர்கள் சம்பளமற்ற விடுமுறை எடுத்து, தேர்தலில் போட்டியிடுவதற் கான நிலையைத் தோற்று வித்தது..

இப்பொழுது தேர்தலை காலவரையறையின்றி ஒத்தி வைத்தால், அதற்கான தார் மீகப் பொறுப்பை தேர்தல் ஆணையம் ஏற்று அவர்கள் இழந்த ஊதியத்தினைத் திரும்ப வழங்கிட வேண்டும். மேலும்,தேர்தல் நடக்கும் என்ற நம்பிக்கையில் ஆயிரக்கண க்கான கிராமப்புற வறிய வேட் பாளர்கள்,தம்மிடம் உள்ள நகைநட்டுகளை அடகு வைத்து தேர்தல் பிரச்சாரங்களை மேற்கொண்டனர். இவர்கள் செலவு செய்த பணத்தையும் தேர்தல் ஆணையம் மீள வழ ங்க நடவடிக்கை எடுக்க வேண் டும்.

தேர்தல் ஆணையம் தனது சுயாதீனத்தன்மையை ஸ்திர ப்படுத்திக் கொள்வதற்காக அக ங்காரத்துடன் தேர்தலை அறி வித்தது. இதனால் அரசியல் கட்சிகளும் அப்பாவி வேட்பா ளர்களும் அநாவசியமாக செலவு செய்யும் நிலைக்குத் தள்ளப்பட்டதுடன்,மக்களும் தேர்தல் நடக்குமா, நடக்காதா என்ற குழப்பமான நிலைக்குத் தள்ளப்பட்டனர். சுயாதீனத் தன்மையை ஸ்திரப்படுத்த முயற்சித்த தேர்தல் ஆணை யம் தனக்கு சுயாதீனத் தன் மையே இல்லை என்பதை உணர்ந்திருக்கும். இறுதியாக, ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டும். உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் நடத்தப் படவேண்டும். இவற்றிற்கெதி ராக செயற்படும் அனைத்து நபர் களும் கண்டிக்கப்படவேண்டி யவர்களே என அவர் மேலும் தெரிவித்தார். (4-6)

# வீதியைப் புனரமைக்குமாறு கிராம மக்கள் கோரிக்கை



(அக்கராயன்)

கிளிநொச்சி கரியாலை நாகபடுவான் கிராமத்திற்கும் முல்லைத்தீவு துணுக்காய் தென்னியங்குளம் கிராமத் திற்கும் இடையிலான வீதி யினை புனரமைக்குமாறு இரு கிராமங்களின் மக்களும் அதி காரிகளிடம் கோரிக்கை விடுத் துள்ளனர்.

கரியாலை நாகபடுவான் குள அணைக்கட்டு வழியாக தென்னியங்குளத்திற்கு சென்ற டைய முடியும். கரியாலை நாக படுவான் குளத்தின் அணை க்கட்டு பற்றைகள் மூடிக் காண ப்படுவதன் காரணமாக தென் னியங்குளம் கிராமத்திற்கு மக்கள் பயணிக்க முடியாது இரு ப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை தென்னியங் குளத்தில் இருந்து கரியாலை நாகபடுவான் கிராமம் வழியாக முழங்காவில் உப நகரத்தினை மக்கள் வந்தடைய முடியும். இரு கிராமங்களுக்கும் இடை யில் 15 கிலோ மீற்றர் தூரம் காணப்படுகின்றது.

முழங்காவிலுக்கு வரு கின்ற தென்னியங்குள மக்கள் யாழ்ப்பாணம், வவுனியா, மன் னார் பகுதிகளுக்கு இலகுவாக செல்ல முடியும். தென்னியங் குளத்தின் உற்பத்திப் பொரு ட்கள் மன்னார், யாழ்ப்பாண சந்தைகளுக்கு இலகுவாக எடு த்துச் செல்ல முடியும். 2009 ஆம் ஆண்டிற்கு முன்னர் குறி த்த வீதி பயன்பாட்டில் கூடுத லாக காணப்பட்டதாகவும் தற் போது வீதிக்கு அருகில் பற் றைகள் வளர்ந்து காணப்படு வதன் காரணமாக மக்கள் குறைவாக போக்குவரத்தில் ஈடுபடுகின்ற னர் எனவும் தென்னியங்கு ளம், கரியாலை நாகபடுவான் குளம் கிராமங்களின் மக்கள் தெரிவிக்கின்றனர். (4-6-50)


# தப்பி ஓடிய கைதி மண்டபம் முகாமில் தஞ்சம்

(மன்னார்)

வவுனியா சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்ட வழியில் தப்பிய இரண்டு கைதி களில் ஒருவர் நேற்று செவ் வாய்க்கிழமை காலை மண் டபம் அகதி முகாமில் தஞ்சம டைந்துள்ளதாக தெரிய வருகி றது.

மன்னார் தோட்டவெளி ஜோசப்வாஸ் நகர்ப் பகுதியைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தர் இவ்வாறு தஞ்சமடைந்துள் ளார். தப்பிய மற்றைய கைதியை பொலிஸார் தேடி வருகின்றனர். (4-6-285)

# வற்றாப்பளை மகா வித்தியாலயத்தில் குடிநீர் நெருக்கடிக்கு தீர்வு



(அக்கராயன்)

முல்லைத்தீவு வற்றாப் பளை மகா வித்தியாலயத்தில் நிலவிய குடிநீர் நெருக்கடிக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. இப் பாடசாலையில் 750 இற்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயிலும் நிலையில் இப்பாடசா லையில் உள்ள கிணறு குடி நீருக்கு பயன்படுத்த முடியாத நிலையில் பாடசாலைக்கு அரு கில் உள்ள வீட்டில் இருந்தே மாணவர்களும் ஆசிரியர்க ளும் குடிநீரைப் பெற்று வந்த நிலையில் வற்றாப்பளை நண்பர்கள் வட்டம் ஊடாக ரூபாய் ஒன்றரை இலட்சம் நிதி செலவில் குடிநீருக்கான இணைப்புகள் வழங்கப்பட்டு முல்லைத்தீவு நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினரால் பாடசாலைக்கான குடிநீர் வழ ங்கல் ஆரம்பிக்கப் பட்டுள் ளது.

இதேவேளை முல்லை த்தீவு மாவட்டத்தில் 30 பாட சாலைகளில் குடிநீர் நெருக்கடி காணப்படுகின்றது. பாடசாலை களில் குடிநீர் வசதியினை உருவாக்கித் தருமாறு பெற் றோர்கள் முல்லைத்தீவு, துணு க்காய் வலயக் கல்விப் பணி மனைகளில் கோரிக்கை விடுத் துள்ளனர். (4-6-350)

# மணல் ஏலவிற்பனை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு எமது நீதிமன்ற வளாகத்தில் மணல் ஏல விற்பனை இடம்பெறவுள்ளது.

ஏல விற்பனைக்கான மண லினை ஏல விற்பனை ஆரம்ப மாவதற்கு அரை மணித்தியா லத்திற்கு முன்பாக பதிவாள ரின் அனுமதியுடன் பார்வை யிடலாம் என நீதிமன்ற பதி வாளர் அறிவித்துள்ளார்.(4-6)

# எதிர்க்கட்சித் தலைவர் சஜித் நாளை யாழ்.வருகிறார்

(அராலி)



எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நாளை 23 ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு தேர் தல் பிரச்சாரத்திற்கு விஜயம் செய்யவுள்ளார்.

அவர், வட்டுக்கோட்டை தொகுதி மற்றும் ஊர்காவற் றுறை தொகுதி அமைப்பாளர் முருகவேல் சதாசிவத்தின் வேண்டுகோளின் பேரில், அனலைதீவு ஐயனார் கோவில் முன்றலில் மற்றும் மூளாய் - வதிரன் புலோ பிரசாத் மண்டப த்தில் நடைபெறவுள்ள பிரச்சார கூட்டத்தில் கலந்து கொள்ள வுள்ளார். (4-6-104)



வடக்கு -கிழக்கு தமிழ்ப் பகுதிகளில் வாழும் மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்தும் நோக்கத்தில் கணபதி அறக் கட் டளை ஊடாக 811 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அண் மையில் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. (படம் - மகாலிங்கம்)

# முள்ளியவளை கலைமகள் வித்தியாலயத்திற்கு அதிபரை நியமிக்குமாறு கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு முள்ளிய வளை கலைமகள் வித்தியா லயத்திற்கு அதிபரை நியமிப்ப தற்கு முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிமனை நடவடி க்கை எடுக்க வேண்டும் என பெற்றோர்கள் கோரிக்கை விடு த்துள்ளனர்.

தரம் 1 தொடக்கம் 11 வரை இப்பாடசாலையில் 750 வரை யான மாணவர்கள் கல்விபயில் கின்றனர். 50 வரையான ஆசி ரியர்கள் பணிபுரியும் நிலையில் இப்பாடசாலையில் பணியா ற்றிய அதிபர் இரு மாதங்களு க்கு முன்னர் ஓய்வுபெற்றுச்சென்ற நிலையில் இதுவரை புதிய அதிபர் நியமிக்கப்படவில்லை.

பாடசாலையின் நிர்வாகச் செயற்பாடுகளை முன்கொண்டு செல்வதற்கும் மாணவர்களின் கல்வியினை வழிப்படுத்துவத ற்கும் இப்பாடசாலைக்கு விரை வாக அதிபரை நியமிப்பதற்கும் முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிமனை நடவடிக்கை எடுக்க வேண்டும் என பெற்றோர் கள் கோரிக்கை விடுத்துள்ள னர். (4-6-350)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகநூல் தரிசனம் 121

## போட்டியாளனின் திட்டமிடல்

அடர்ந்த காடு ஒன்று. அதைச் சுற்றிலும் அழகான குட்டிக் குட்டித் தீவுகள் இருந்தன. அந்தக் காட்டின் தலைவருக்கு வயதாகி விட்டது. அவருக்குப் பிறகு அந்த மக்களை வழி நடத்த வேறு ஒருவரை நியமிக்க முடிவு செய்தார்.

அந்தக் காட்டில் , பரம்பரை ஆட்சி என்ற வழக்கம் கிடையாது. கடினமான போட்டிகளை நடத்தியே தலைவர்களைத் தேர்ந்தெடுப்பார்கள். எனவே தலைவர் போட்டிகளை அறிவிக்கும்படி தன்னுடைய உதவியாளர்களுக்கு கட்டளையிட்டார்.

நான்கு நாட்கள் நடந்த போட்டிகளில் இரண்டு இளைஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இருவரையும் நேரடியாக மோதவிட்டால் பதவி ஆசையினால் ஒருவரை ஒருவர் பலமாகத் தாக்கி அதில் ஒருவர் கொல்லப்படுவது உறுதி. எனவே வேறோரு திட்டத்தை முடிவு செய்தார்.

"இளைஞர்களே! இதுவரை உங்களுடைய பராக்கிரமத்தால் உங்களுக்கு நிகர் யாருமில்லை என்பதை நிரூபித்து விட்டீர்கள். இப்போது நடக்கப் போவது இறுதிப் போட்டி. இதில் ஜெயிக்கும் ஒருவன்தான் தலைவனாக முடி சூட்ட்ப்படுவான். இப்போது உங்கள் இருவருக்கும் சில ஆயுதங்களும் சமையல் பாத்திரங்களும் உணவு தானியமான சோளம் ஒரு மூட்டையும் தந்து "நம்முடைய ஆட்கள் உங்கள் இருவரையும் காட்டுக்கு அருகிலிருக்கும் வெவ்வேறு தீவுகளில் படகில் கொண்டு போய் விட்டுவிட்டு வந்து விடுவார்கள். சேவையாளர்கள், நீங்கள் உங்களிடம் இருக்கும் தானியத்தை சமைத்து சாப்பிட்டு அது தீரும் வரை காட்டிலேயே தங்கி இருக்க வேண்டும்."

"தீர்ந்த பிறகு காட்டில் இருக்கும் மஞ்சள் மரத்தின் கிளைகளை ஒடித்துக் கடற்கரையில் வைத்துக் கொளுத்துங்கள். "

"அதிலிருந்து வரும் புகையைக் கண்டவுடனேயே இங்கிருந்து படகை அனுப்பி உங்களை மீட்டுக் கொள்ளுவோம் . உங்களில் யார், கையில் இருக்கும் தானியத்தை அதிக நாட்கள் பயன்படுத்தி அந்தத் தீவில் தாக்குப் பிடிக்கிறீர்களோ அவன் தான் தலைவனாகத் தேர்ந்தெடுக்கப்படுவான் " என்றார்.

மஞ்சள் மரம் என்பது அந்தக் காடுகளில் அதிகமாகக் காணப்படும் ஒரு மரம். அதை எரிக்கும் போது எழும்பும் செம்பழுப்பு நிறப் புகை நீண்ட நேரம் நிலைத்திருக்கும்.

தலைவர் சொன்ன நிபந்தனைகளை இரண்டு வீரர்களும் ஏற்று கொண்டு ஆளுக்கொரு தீவுக்குப் பயணமானார்கள் .

இரு இளைஞர்களும் ஆளில்லாத தீவுகளில் வசிக்க ஆரம்பித்தார்கள். இரண்டு தீவுகளிலும் எங்கேனும் செம்பழுப்பு நிறப்புகை எழும்புகிறதா என்று பார்த்தபடி எந்நேரமும் படகை எடுத்துச் செல்ல ஆயத்தமாக சேவையாளர்கள் நியமிக்கப்பட்டார்கள்.மூன்று மாதங்கள் முடிந்ததும் ஒரு தீவின் கடற்கரையிலிருந்து புகை எழும்பியது. உடனே ஒரு படகு புறப்பட்டுப் போய் அங்கே எலும்பும் தோலுமாக இருந்த இளைஞனை கரைக்கு அழைத்து வந்ததும் சுதாரித்துக் கொண்டு தலைவரிடம் சொன்னான், எங்களுக்கு கொடுக்கப்பட்ட சோளம் இரண்டு மாதத்திற்கு மட்டுமே போதுமானதாக இருந்தது. இருந்தும் நான் சாமர்த்தியமாக இத்தனை நாள் தாக்குப் பிடித்திருக்கிறேன். அவனும் என்னைப் போலத் தாக்குப் பிடித்திருப்பான் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை. எனக்கே பதவியைக் கொடுக்க வேண்டுகிறேன்" என்றான்.

தலைவருக்கு அவன் சொன்னதைக் கேட்டு கொஞ்சம் அச்சம் உண்டாகி விட்டது. நான்கு மாதங்கள் கழிந்து விட்ட பிறகு தலைவருக்கே சந்தேகம் வர தானே நேரில் சென்று பார்ப்பதற்கு படகோட்டியை அழைத்து படகில் சென்றார்.

குறித்த தீவின் கரையை அடைந்து காட்டுக்குள் நடந்து சென்ற வேளை சிறு தூரத்தில் மூங்கிலாலும் ஓலைகளாலும் கட்டப்பட்ட வீட்டினுள் அந்த இளைஞன் இருப்பதைக் கண்டார்.

தலைவரைக் கண்டதும் அந்த இளைஞன் உள்ளே, வாருங்கள் என அழைத்துச் சென்று அமர வைத்தான்.உள்ளே ஓடிப்போய் சூடான சோள அடையும் மீனும் கொண்டு வந்து கொடுத்தான்.

"உனக்குக் கொடுக்கப்பட்ட சோளம் மூன்று மாதத்துக்குள் முடிந்திருக்குமே. இது எப்படி சாத்தியம் ?" என்றார்.தரைவரை வீட்டின் பின்புறம் அழைத்து சென்று அவன் சொன்னான், "தலைவா, நான் வந்த அன்றே எனது தானியத்திலிருந்து ஒரு பங்கை எடுத்து விதைத்து வைத்து விட்டேன். இரண்டு மாதங்களிலேயே அறுவடைக்குத் தயாராகி விட்டது.

நான் எந்தக் கவலையுமில்லாமல் நிறைவாக சாப்பிட்டேன். இந்த நான்கு மாதம் மட்டுமல்ல. இன்னும் எத்தனை வருடம் வேண்டுமென்றாலும் என்னால் இங்கே வாழ முடியும் எனக் கூற "நீ தடுமாறிப் போவாய் என்று எண்ணி இந்தப் போட்டியை வைத்தேன். நீயோ உன் அறிவாலும் உழைப்பாலும் என்னைத் திணறடித்து விட்டாய். காட்டுக்கு ஒரு நல்ல தலைவனைக் கொடுத்த கடவுளுக்கு நன்றி என்றார். கையில் கொடுக்கப்பட்டதைத் திட்டமிட்டுப் பெருக்கிக் கொள்ளுகிறவர்களே ஜெயிக்கிறார்கள். அது பொருளாக இருந்தாலும் வாழ்க்கையானாலும் நேரமானாலும் சரி.

# உள்ளூராட்சி சபைத் தேர்தலை தாமதப்படுத்தக் கூடாது

## மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

**உள்ளூராட்சி சபைத் தேர்தலை தாமதப் படுத்தக் கூடாது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**



பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

திட்டமிட்டபடி தேர்தலை நடத்த வேண்டும் என்றே தமது கட்சி கருதுவதாகவும் அதில் தாங்கள் உறுதியாக உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# மூன்று மாதங்களின் பின் கியூ.ஆர் முறைமை நீக்கப்படும்

(கொழும்பு)

எரிபொருள் விநியோகத்திற்காக தற்போது நடைமுறைப்படுத்தப் படும் கியூ.ஆர் முறைமை எதிர்வரும் 3 மாதங்களின் பின்னர், நீக்கப்படும் என மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட போதே அவர் இத்னைக் குறிப்பிட்டுள்ளார். (நி)

# இறக்குமதி செய்யப்படும் பழங்களின் விலை குறைந்தது

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படும் பழங்களின் விலை குறைந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த காலங்களில் சந்தையில் அதிகரித்துள்ள அப்பிள், ஒரேஞ்ச் உள்ளிட்ட பல வகையான பழங்களின் விலைகள் தற்போது குறைந்துள்ளதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன், உள்ளூர் வியாபாரிகள் வழங்கும் வாழைப்பழம், பப்பாளி, அன்னாசி போன்ற பழங்களின் விலை மேலும் அதிகரித்து வருகிறது எனவும் தெரிவித்துள்ளனர். (நி)

# தேர்தலைப் பெறும் வரை போராட்டங்கள் தொடரும்

## சஜித் பிரேமதாஸ

(கொழும்பு)

முன்வைத்த காலை ஒரு போதும் பின்வைக்க நாம் தயாரில்லை என எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

எனவே தேர்தலைப் பெறும் வரை எமது போராட்டம் தொடரும் என்வும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் ஐக்கிய மக்கள் சக்தியால் ஏற்பாடு செய்யப்பட்ட போராட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இந்த விடயத்தை தெரிவித்தார். (நி)

# விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளர் பதவிக்காக 50 பேரை இணைக்கும் அரசாங்கம்

(கொழும்பு)

விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளர் பதவிக்காக 50 பேரை புதிதாக பயிற்சிக்கு இணைத்துக் கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளது.



விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளர் பற்றாக்குறையை தவிர்க்கும் வகையில் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாக விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

அண்மையில் இரத்மலானை சிவில் விமானப் பயிற்சிப் பாடசாலைக்கு விஜயம் செய்த போதே அவர் இந்த அறிவித்தலை விடுத்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 109





காலை உணவுக்குப் பிறகு சேந்தன் அமுதன் உச்சிவேளை பூஜைக் கைங்கரியத்துக்காகப் பூக்குடலையுடன் கிளம்ப, வந்தியத் தேவன் சக்கரவர்த்தியின் தரிசனத்துக்காகப் புறப்பட்டான். இருவரும் நடந்தே சென்றார்கள்.

கோட்டைக்குள் குதிரையைக் கொண்டு போக வேண்டாம் என்று வல்லவரையன் முன்னமேயே தீர்மானித்திருந்தான். குதிரை நன்றாக இளைப்பாற அவகாசம் கொடுப்பது அவசியம். சீக்கிரத்தில் அக்குதிரையை, தான் துரிதப் பிரயாணத்துக்கு உபயோகப்படுத்த வேண்டி வரலாம், யார் கண்டது? எப்படியானாலும், அது இங்கே இருப்பதுதான் நல்லது. கோட்டை வாசல் போய்ச் சேரும் வரையில் அமுதனுடன் பேச்சுக் கொடுத்து இன்னும் சில விபரங்களைத் தெரிந்து கொண்டான்.

"உன் அன்னையைத் தவிர உனக்கு வேறு உற்றார், உறவினர் யாரும் கிடையாதா?" என்று வல்லவரையன் கேட்டதற்கு அமுதன் கூறியதாவது "இருக்கிறார்கள், என் அன்னையுடன் கூடப் பிறந்த ஒரு தமக்கையும் தமையனும் உண்டு.

தமக்கை காலமாகி விட்டாள் தமையனார் கோடிக்கரைக் குழகர் கோயிலில் புஷ்ப கைங்கரியம் செய்கிறார். அத்துடன் இரவு நேரங்களில் கலங்கரை விளக்கத்தில் தீபமேற்றிப் பாதுகாக்கும் பணியும் செய்து வருகிறார். அவருக்கு ஒரு புதல்வனும் புதல்வியும் உண்டு புதல்வி" என்று நிறுத்தினான்.

"புதல்விக்கு என்ன?"

"ஒன்றுமில்லை எங்கள் குடும்பத்திலேயே ஒரு விசித்திரம். சிலர் ஊமையாகப் பிறப்பார்கள் மற்றவர்கள் இனிய குரல் படைத்திருப்பார்கள் நன்றாய்ப் பாடுவார்கள்"

"உன் மாமனின் மகள் ஊமை இல்லையே?" என்றான் வந்தியத் தேவன்.

"இல்லை, இல்லை!" "அப்படியானால் நன்றாய்ப் பாடக் கூடியவள் என்று சொல்லு, உன்னைக் காட்டிலும் நன்றாய்ப் பாடுவாளா?"

"அழகாயிருக்கிறது உங்கள் கேள்வி 'குயில், காக்கையை விட நன்றாய்ப் பாடுமா?' என்று கேட்பது போலிருக்கிறது. பூங்குழலி பாடினால், சமுத்திரராஜா அலை எறிந்து ஓசை செய்வதை நிறுத்தி விட்டு அமைதியாகக் கேட்பார்.ஆடு, மாடுகளும் காட்டு மிருகங்களும் மெய் மறந்து நிற்கும்."

"உன் மாமன் மகளின் பெயர் பூங்குழலியா? அழகான பெயர்!"

"பெயர் மட்டுந்தானா அழகு? "அவளும் அழகியாகத்தான் இருக்க வேண்டும் இல்லாவிட்டால், நீ இவ்வளவு பரவசமடைவாயா?"

"மானும் மயிலும் அவளிடம் அழகுக்குப் பிச்சை கேட்க வேண்டும். ரதியும் இந்திராணியும் அவளைப் போல் அழகியாவதற்குப் பல ஜன்மங்கள் தவம் செய்ய வேண்டும்."

சேந்தன் அமுதனுடைய உள்ளம் சிவபக்தியிலேயே பூரணமாக ஈடுபடவில்லையென்பதை வல்லவரையன் கண்டு கொண்டான்.

"அப்படியானால் உனக்குத் தகுந்த மணப் பெண் என்று சொல்லு. மாமன் மகளாகையால் முறைப் பெண்ணுங் கூடத்தானே? கல்யாணம் எப்போது?" என்று கேட்டான் வந்தியத்தேவன்.

"எனக்குத் தகுந்தவள் என்று ஒருநாளும் சொல்ல மாட்டேன். நான் அவளுக்கு எவ்விதத்திலும் தகுதியில்லாதவன். பழைய நாட்களிலே போலப் பூங்குழலிக்குச் சுயம்வரம் வைத்தால் ஐம்பத்தாறு தேசத்து ராஜாக்களும் வந்து போட்டி போடுவார்கள். தமயந்தியை மணந்து கொள்வதற்கு வானுலகத்திலிருந்து தேவர்கள் வந்தது போல் வந்தாலும் வருவார்கள்.


(தொடரும்...)

## சிறுவர் அரங்கம்



## பரமார்த்த குரு கதைகள்

### இறுதி யாத்திரை



(நேற்றைய தொடர்ச்சி)

ஆருடக்கார பிராமணன் சொல்லியிருந்த வார்த்தைகளும் அசங்கதன் கூறிய வார்த்தைகளும் அவர் செவிகளில் போட்டியிட்டுக் கொண்டு ஒலித்தன.

"ஐயோ! எனக்குச் சாவு நெருங்கி விட்டது." என்று ஆசனத்தை அடிக்கடி தொட்டுப் பார்த்து வருந்தினார்.

குரு விழித்துக் கொண்டு வேதனைப் பட்டுக் கொண்டிருந்த நேரத்தில் சிஷ்யர்களும் ஒருவர் பின் ஒருவராக விழித்து எழுந்து, குருவின் அரற்றலைக் கேட்டு ஓடி வந்தார்கள்.

விடயம் புரிந்தது அவர்களுக்கும். குருவின் இருப்பிடம் குளிர்ந்து விட்டது. இனி அவ்வளவு தான் என அவர்கள் அழுது புலம்பினார்கள். அந்த சப்தம் கேட்டு அக்கம் பக்கத்தவர்களும் ஓடி வந்தார்கள்.

அப்போது குருவின் முகத்தில் பயமும் பீதியும் கலந்து, சவக்களையாகவே அவர்களுக்குத் தெரிந்தது. ஆகவே வந்தவர்களும் பரமார்த்த குருவுக்கு அந்திம காலம் தான் என்ற அந்த முடிவுக்கே வந்து விட்டார்கள்.

குருவை அக்கறையோடு விசாரித்தார்கள். அவரும் தமக்கு ஆசன சீதம் ஏற்பட்டு விட்டதை மறைக்காமல் சொல்லி மனம் புழுங்கினார். கண்களில் தாரை தாரையாக நீர் வழிந்தது அவருக்கு.

அடிக்கடி அவர் உதடுகள், ஆசன சீதம் ஜீவன் நாசம்' என்றே உச்சரித்துக் கொண்டிருந்தன.

அன்றிலிருந்து அவர் உடல் நிலை நாளுக்கு நாள் பலவீனமாகிக் கொண்டே வந்தது. அவரால் வாய் திறந்து பேசக் கூட முடியாத அளவுக்குச் சோர்வும் சோகமும் கப்பிக் கொண்டன.

அவர் நிலையைப் பார்க்கப் பொறாதவர்களாய் சிஷ்யர்கள் ஐவரும் அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக இருந்தார்கள்.

ஒரு நேரத்தில் பரமார்த்த குரு, ஆயாசமாக அயர்ந்து கண்களை மூடியிருப்பதைப் பார்த்து, அவர் உயிரையே விட்டு விட்டார் என்று "ஓ" வென சிஷ்யர்கள் ஓலமிட்டுக் கதறினார்கள்.

"கடவுளே! எங்கள் குருநாதரை உன்னிடத்துக்குக் கூப்பிட்டுக் கொண்டாயா? எங்கள் தெய்வம் எங்களை விட்டுப் பிரிந்து சென்று விட்டதா? குருவே! இனி உங்களை நாங்கள் எங்கே காண்போம்? எப்படி காண்போம்? என்று காண்போம் ? என்று தலையில் அடித்துக் கொண்டு ஒருவரையொருவர் கட்டிப் பிடித்துக் கொண்டு 'ஓ' வென்று கூவி ஓயாமல் அழுது கிடந்தார்கள் சிஷ்யர்கள்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல சேவை செய்வதற்குரிய ஆற்றலை கெட்ட மனிதனிடம் ஒருநாளும் காணமுடியாது.
~ பர்க்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வரிச்சுமையால் மக்களை வதைப்பது முறையோ!

நாட்டின் பொருளாதாரம் மந்த நிலைக்கு வந்துவிட்டதென்பது தெரிந்த உண்மை.

இவ்வாறு நாடு பொருளாதாரப் பெருமந்தத்தை அனுபவிப்பதற்குக் காரணம் யாது? என்பதைக் கண்டறிவதுதான் நாட்டை மீட்டெடுப்பதற்கான முதற்கட்டப் பணியாக இருக்க வேண்டும்.

அவ்வாறானதொரு ஆய்வு செய்யப்படுமாயின், நாட்டின் பொருளாதாரம் அரசாட்சியில் இருந்தவர்களால், கப்ளீகரம் செய்யப்பட்டமையே பொருளாதார பெருமந்தத்துக்குக் காரணம் என்ற உண்மை தெரியவரும்.

அவ்வாறாயின் நாடு, இழந்த சொத்துக்களை மீட்டெடுப்பதுதான் ஒரே வழி.

அதற்காக சம்பந்தப்பட்டவர்களை நீதியின் முன் நிறுத்தி கபளீகரம் செய்யப்பட்ட பெருந்தொகைச் சொத்துக்களை பறிமுதல் செய்வதுடன் நாட்டுக்குத் துரோகம் இழைத்த குற்றச்சாட்டின் கீழ் சம்பந்தப்பட்ட ஆட்சித் தரப்பினருக்கு சிறைத் தண்டனை விதிக்க வேண்டும்.

இதைச் செய்வதன் மூலம் இழந்த பெரும் சொத்தை இந்த நாடு மீளப் பெற்றுக் கொள்ளும்.

ஆனால் அதுபற்றி இன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவோ அல்லது பாராளுமன்ற அரசோ இம்மியும் கருசனை கொள்ளவில்லை.

மாறாக, நாடு பொருளாதார நெருக்கடிக்கு ஆளாகிவிட்டது. நாட்டை மீட்டெடுக்க உதவுங்கள் என்று உலக நாடுகளிடமும் சர்வதேச நாணய நிதியத்திடமும் கையேந்துவதை அரசு செய்கிறது எனில் இது எந்தவகையிலும் பொருத்தமற்றது.

தவிர, நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்படுவதற்குக் காரணமாக இருந்தவர்களைத் தண்டிக்காமல், அவர்கள் கொள்ளையடித்த சொத்துக்களைப் பறிமுதல் செய்யாமல் நாட்டு மக்களின் தலைகளில் வரிச்சுமையை ஏற்றுவதென்பது எந்தவகையிலும் நியாயத்துவமுடையதல்ல.

ஆம், பொருளாதாரம் – பொருளியல் என்பது நியாயத்துவமுடையதாக இருக்க வேண்டும்.

நியாயத்துவத்தை மீறிய எந்தச் செயற்பாடும் தோல்வியாக அமைவதுடன், அதனால் நாட்டின் பொருளாதாரம் மென்மேலும் வீழ்ச்சியடையும்.

இதனையே இன்றைய ஆட்சித் தரப்பு செய்கின்றது.

உண்மை. இந்த நாட்டின் ஒட்டுமொத்த மக்கள் மீதும் கடும் வரிச்சுமை ஏற்றப்பட்டுள்ளது.

அரச உத்தியோகத்தர்கள், வங்கிகளில் நிரந்தர வைப்பில் பணத்தை இட்டு அதிலிருந்து கிடைக்கும் வட்டி வருமானத்தில் சீவியம் நடத்துவோர் என அனைவரிடமும் கண்டபாட்டில் வரி அறவிடப்படுவதால், மக்கள் எதுவும் செய்ய முடியாத பரிதாப நிலைக்கு ஆளாகியுள்ளனர்.

ஆக, நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுத்தல் என்ற பேரில் பொதுமக்கள் வதைக்கப்படுகின்ற கொடுமை வரி மற்றும் பொருட்கள் சேவைகளின் விலையேற்றம் என்பவற்றினூடாக நடந்தாகிறது.

இதுவே இலங்கையின் சமகால நிலைமை என்பது புரிதற்குரியது.

# தேர்தல் ஒத்திவைக்கப்படுவது நாட்டை சர்வாதிகார ஆட்சிக்குள் தள்ளும்

## பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித்

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஒத்திவைக்கப்படுவதற்கான காரணம் அரசாங்கத்தின் மீது அதிகரித்து வரும் பொதுமக்களின் அதிருப்தியாக இருந்தால், தேர்தலை எதிர்கொண்டு அதன் முடிவுகளுக்கு ஏற்ப மாற வேண்டும் என்று கொழும்பு மறை மாவட்ட பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்தார்.

பேராயர் அலுவலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்திய கத்தோலிக்க திருச்சபையின் ஊடகப் பேச்சாளர் சிறில் காமினி பெர்னாண்டோ மேற்குறிப்பிட்ட கர்தினாலின் விசேட அறிவிப்பை வெளியிட்டார்.

தம்மை தோல்விக்குப் பயந்த கோழையாக வரலாற்றில் இடம் பெறுவதை தவிர்க்கும் புத்திசாலித்தனம் நமது நாட்டின் தலைவர்களுக்கு இருப்பதாக தான் எண்ணுவதாகவும் பேராயர் விசேட அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் ஒத்திவைக்கப்படுவது இறுதியில் நாட்டை சர்வாதிகார ஆட்சிக்குள் தள்ளும் என்றும் கர்தினால் அறிவித்துள்ளார். (ம-7)

## சாரதி அனுமதிப்பத்திரத்திற்கு புதிதாக விண்ணப்பிப்போர்

### முதலுதவி கருத்தரங்கில் பங்கேற்பது கட்டாயம்

(கொழும்பு)

சாரதி அனுமதிப் பத்திரத்திற்காக புதிதாக விண்ணப்பிக்கும் அனைவருக்கும் முதலுதவி தொடர்பான அடிப்படை தெளிவூட்டலை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, சாரதி அனுமதிப் பத்திரத்திற்காக புதிதாக விண்ணப்பிக்கும் அனைவரும் தமது திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்படும் முதலுதவி கருத்தரங்கில் பங்கேற்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஷாந்த வீரசிங்க தெரிவித்துள்ளார்.

வாகன விபத்திற்கு முகங்கொடுக்க நேரிடும் சந்தர்ப்பத்தில் அடிப்படை முதலுதவி பற்றிய அறிவு இன்மையின் காரணமாக அனர்த்தத்தின் பாதிப்பு அதிகமாவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆகவே, சாரதிகளுக்கு அடிப்படை முதலுதவி பற்றிய அறிவை வழங்கும் நோக்கில் இந்த திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## மைத்திரி மற்றும் தயாசிறிக்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவு

ஜாஅல பிரதேச சபையின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் சாமலி பெரேராவின் பதவிக்கு வேறு ஒருவரை நியமிக்க தடை விதித்து முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர ஆகியோருக்கு எதிராக கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

எந்தவித ஒழுங்கு நடவடிக்கையும் இன்றி அநீதியான முறையில் தனது பதவியை நீக்குவதற்கு தயாராகி வருவதாகவும், அவருக்குப் பதிலாக வேறு ஒருவரை நியமிக்கத் தயாராகி வருவதாகவும் மனுதாரர் தனது மனுவில் தெரிவித்துள்ளார்.

மனுதாரர் சார்பில் முன்வைக்கப்பட்ட உண்மைகளை பரிசீலித்த கொழும்பு பிரதான மாவட்ட நீதிபதி பூர்ணிமா பரணகமகே மார்ச் மாதம் மூன்றாம் திகதி வரை இந்த இடைக்காலத் தடை உத்தரவைப் பிறப்பித்தார். (ம-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக

நாளை வியாழன் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **யாழ். பிரதேசத்தில்** மண்கும்பான் நீர்ப்பாசன சபை, அல்லைப் பிட்டி, அல்லைப்பிட்டி தேவாலயத்தடி, வெள்ளைப்புரவி நகர் ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில் ஜெயபுரம் தேவாலயம், ஜெயபுரம் பாடசாலை, ஜெயபுரம், கிராஞ்சி, சிவபுரம், நாகப்படுவான், பாலாவி, பொன்னாவெளி, வலைப்பாடு, வேராவில் **வவுனியா பிரதேசத்தில்** சிதம்பரபுரம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## வவுனியாவில் குளவி கொட்டுக்கு இலக்கான

### மாணவர் உட்பட ஐவர் வைத்தியசாலையில் அனுமதி

வவுனியா கோவில்குளம் பாடசாலைக்கு அருகாமையில் நேற்று பிற்பகல் காற்றில் கலைந்த குளவி வீதியால் சென்றவர்கள் மீது கொட்டியதால் பாடசாலை சென்ற மாணவர் ஒருவர் உட்பட ஐவர் வவுனியா பொது வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக தகவல் அறிவிக்கப்பட்டு நோயாளர் காவு வண்டி மூலம் பாதிக்கப்பட்டவர்கள் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்ப்பட்டனர்.

பாதிக்கப்பட்டவர்கள் சிகிச்சையின் பின்னர் மாலையில் நோயாளர் விடுதிக்கு மாற்றப்பட்டுள்ளனர். (ம-7,299)

## யாழ். போதனாவின் மருத்துவக் கழிவுகள்

### இனி வவுனியாவில் எரிக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்போதனா வைத்தியசாலையின் மருத்துவக்கழிவுகள் இனிமேல் தெல்லிப்பளையில் எரிக்கப்படாது என யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் வைத்தியர் யமுனானந்தா தெரிவித்துள்ளார்.

இனிவரும் நாட்களில் மருத்துவக்கழிவுகள் வவுனியாவில் எரிக்கப்படும்.

யாழ்ப்பாணம்போதனா வைத்தியசாலையின் மருத்துவக்கழிவுகள் இதுவரை தெல்லிப்பளையில் எரிக்கப்பட்டு வந்தது. அங்கு உரிய சுகாதார முறைகள் பின்பற்றப்படாமல், சுற்றுச்சூழலிலுள்ள மக்களிற்கு ஆபத்தான முறையில் மருத்துவக் கழிவுகள் எரிக்கப்படுவதாக பலமுறை குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு வந்தது.

இந்த விவகாரம் தொடர்பில் ஆராயும் உயர்மட்ட கூட்டம் நேற்று நடைபெற்றது. மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமையில் இந்த கூட்டம் நடந்தது.

அத்துடன், மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பதில் பணிப்பாளர் உள்ளிட்ட குழுவினர் தெல்லிப்பளையில் மருத்துவக்கழிவுகள் எரியூட்டப்படும் இடத்திற்கு களவிஜயமும் செய்தனர்.

இதன்போது, யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை மருத்துவக் கழிவுகளை இனிமேல் தெல்லிப்பளையில் எரியூட்டுவதில்லையென்ற முடிவை யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை பதில் பணிப்பாளர் யமுனானந்தா அறிவித்தார். (ம-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தென்னைச் செய்கையாளர்களே!
# தென்னையினை அழிக்க புதிய பீடை வந்துவிட்டது
# அது தான் தென்னை வெள்ளை ஈ (Coconut white fly)

இலங்கையில் தென்னைகளினைத் தாக்கி விளைச்சலினைக் குறைத்து மரத்தினையே படச் செய்யும் புதிய பீடையான தென்னை வெள்ளை ஈ பரவி வருகிறது. குறிப்பாக யாழ். மாவட்டத்தில் வேகமாகப் பரவுகின்றது. இதனை உடன் கட்டுப்படுத்துங்கள். இல்லையேல் தேங்காய் உற்பத்தி பாரியளவில் பாதிக்கப்படும். இலங்கையில் பல வருடங்களாக தென்னைச் செய்கையினை பாதிக்கும் 'மைற்' பீடையினைத் தொடர்ந்து தென்னை வெள்ளை ஈ 2019 ஆம் ஆண்டில் முதன்முறையாக கேகாலை மாவட்டத்தில் இனங்காணப்பட்டது. பின்பு குருநகல், கண்டி, மாத்தறை, இரத்தினபுரி, புத்தளம், அம்பாந்தோட்டை மாவட்டங்களிற்கு பரவியது. 2021 ஆம் ஆண்டு குறிப்பிட்ட மாவட்டங்களில் கூடுதலான தாக்கத்தை ஏற்படுத்தியது.

இந்தப் புதிய பீடையானது யாழ். மாவட்டத்தில் 2022 ஆம் ஆண்டு பிற்பகுதியில் பரவத் தொடங்கி இந்த மாதம் (பெப்ரவரி) மிகவும் வேகமாக பரவிக் கொண்டிருக்கின்றது. இந்தத் தென்னை வெள்ளை ஈயின் பிறப்பிடம் அமெரிக்காவிலுள்ள புளோரிடா மாகாணமாகும். 2016 ஆம் ஆண்டு இந்தியாவின் தமிழ்நாட்டில் உள்ள கோவை மாவட்டத்தில் தொடங்கி கேரளா வரை பரவியது.

இதன் பின்பு தற்சமயம் இலைக்கும் வந்துவிட்டது. முக்கியமாக வெள்ளை ஈ இனை பல இனங்களாக வகைப்படுத்தலாம். தென்னை மட்டுமல்லாது ஏனைய பயிர்களையும் தாக்கி சேதத்திற்கு உள்ளாக்கும். ஆனால் இலங்கையில் தென்னையில் சேதத்தினை விளைவிப்பது இரு இனங்கள் என தென்னை ஆராய்ச்சி நிலையத்தினர் கண்டுபிடித்துள்ளனர்.

1. Rugose Spiraling (றூ கோஸ்)



முதிர் வெண் ஈ பெண் (Rugose)

2. Aleurodicus Cocois (அலேயு றொடிக்கஸ்)

**தாக்கத்தின் அறிகுறிகள்**

தென்னை வெள்ளை ஈ தென்னோலையின் அடிப்பகுதியில் பச்சையத்தினை (குளோரோபில்) உண்டு தாக்கத்தினை ஏற்படுத்துவதனால் நாளடைவில் தென்னோலை கருகிய தோற்றம் அளிக்கும். இதன் கழிவு தென்னையின் கீழ்ப்பகுதியில் விழுவதனால் கறுப்பு நிறமாகும். இதன் விளைவாக கறுப்பு பங்கசு தாக்கமும் ஏற்படுகின்றது.


தென்னோலையின் கீழ்ப் பகுதியில் வெள்ளை ஈ திரவத்தினைச் சுரந்து முட்டைகளை இடுவதனால் முட்டைகள் ஓலையில் ஒட்டிக் கொள்ளும்.

கூடுதலாக செவ்விளநீர், கலப்பின இனங்களில் அதிகளவு தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது.

கீழே இருந்து தென்னையின் வட்டுப் பகுதியினைப் பார்க்கும் பொழுது கண்ணில் தென்படத்தக்கதாக சிற்றோலையில் பனிப்படலம் படர்ந்தது மாதிரி வெண்மையாக தோற்றம் அளிக்கும்.

இரவு 7 மணியில் இருந்து 11 மணி வரை தான் தாக்கத்தின் உச்சகாலம் ஆகும். இந்நேரத்தில் தென்னை மரத்தின் கீழ் இருந்து டோச் லைற் வெளிச்சத்தினைப் பாய்ச்சினால் மிகவும் துலக்கமாக அதன் தாக்கம் தெரியும். (அனுபவ உண்மை)

இத்தாக்கத்தினால் தேங்காய் விளைச்சலில் அதிக பாதிப்பு ஏற்படும்.




அதன் வாழ்க்கை வட்டம்

தென்னை வெள்ளை ஈ தென்னோலையின் அடிப்பகுதியில் சுருள் சுருளாக முட்டையிட்டு பெருகும் போது பச்சைய இழப்பு ஏற்படுவதால் உணவு உற்பத்தி (ஒளித்தொகுப்பு) பாதிக்கப்பட்டு மரம் இறப்பதற்கு சந்தர்ப்பம் உண்டாகும்.

**கட்டுப்பாட்டு முறைகள்**

Power Sprayer (வலுத் தெளி கருவி மூலம்) உயர் அமுக்கத்தில் மரத்தின் கீழ்ப் பகுதியில் இருந்து மேல்நோக்கி தென்னை சிற்றோலைகளில் படத்தக்கவாறு தண்ணீரை விசிறவும். இதனால் வெள்ளை ஈ முட்டைகள், பருவ நிலைகள் எல்லாம் கழுவப்பட்டு தாக்கம் குறையும்.

தென்னை ஆராய்ச்சி நிலைய சிபாரிசின்படி.

வேப்பெண்ணெய் - 10 மில்லி லீற்றர், சோப் பவுடர் - 5 கிராம், தண்ணீர் -1 லீற்றர் இந்த அளவுப் பிரமாணத்தில் மூன்றையும் கலந்து தேவையான அளவு மரத்திற்கேற்ப வலு தெளி கருவி மூலம் ஓலையின் அடிப்பகுதிக்கு படத்தக்கவாறு விசிறவும்.

பஞ்சகாவியத்தினை 3 லீற்றர் எடுத்து 10 லீற்றர் தண்ணீர் கலந்து விசிறலாம்.

வெறுமையான 1 லீற்றர் தண்ணீர்ப் போத்தலில் சிறிதளவு நெத்தலிக் கருவாட்டு தூளினை இட்டு 1 லீற்றர் தண்ணீரில் கலந்து மூடிப் பகுதிக்கு கீழாக சிறிதளவு இடைவெளி விட்டு மூடாமல் தென்னோலை மட்டைகளில் கட்டித் தொங்க விட வேண்டும். இது ஒரு இனக் கவர்ச்சி பொறிமுறையாகும்.



திரு.ஜெ.சத்தியேந்திரன்,
ஓய்வுநிலை உதவிப்பிராந்திய முகாமையாளர்,
தென்னைப் பயிர்ச் செய்கைச்சபை, யாழ்ப்பாணம்.

ஒரு ஏக்கர் தென்னந் தோட்டத்திற்கு 15-20 போத்தல்கள் போதுமானது.

தேவையற்ற காய்ந்த மட்டைகளை வெட்டி விடவும்.

5 அடி x 1 1/2 அடி நீள அகலமுள்ள மஞ்சள் பொலித்தீனை வாங்கி தென்னையினைச் சுற்றி (அடியிலிருந்து 7 அடிக்கு மேலே) கட்டிவிடவும். அதன் மேற்பரப்பில் கிறீஸ் பூசி விடவும்.

தென்னை ஆராய்ச்சி நிலையத்தினருடன் கதைத்த போது உயிரினவியல் கட்டுப்பாட்டு முறை பற்றி ஆராய்ச்சி நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இராசாயன பூச்சிநாசினிகளை பாவிப்பதனை இயன்ற வரை தவிர்க்கவும்.

Mobile No: 077 505 6263
**இலவச ஆலோசனை தேவையானவர்கள் தொடர்பு கொள்ளவும்.**

# வரியை மேலும் அதிகரிக்க அரசாங்கம் திட்டம்
## லக்ஷமன் கிரியெல்ல

(கொழும்பு)

தற்போதைய ஆட்சியில் வரி மேலும் அதிகரிக்கப்படும் என எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

அரச வருவாயை அதிகரிக்க உலக வங்கி 2015 இல் அறிவுறுத்தியமைக்கு இணங்க அதற்கான நடவடிக்கையை எடுக்கும் போது பெரிய நிறுவனங்கள் வரி ஏய்ப்பு செய்தமையை கண்டறிந்ததாக சுட்டிக்காட்டினார்.

பின்னர் இந்த பெரிய நிறுவனங்களுக்கான வரியை தனது அரசாங்கத்தின் முதல் வரவு- செலவுத் திட்டத்தில் நீக்கிய கோட்டாபய ராஜபக்ஷவும் இந்த நிலைமைக்கு பொறுப்பு என்றும் குற்றம் சாட்டியுள்ளார்.

கோட்டபாய ராஜபக்ஷ இந்த முடிவை எடுத்ததன் காரணமாக 800 பில்லியன் இழப்பு ஏற்பட்டது என்றும் இரு மாதங்களுக்குப் பின்னர் கொரோனா மருந்துக்குப் பணம் இல்லாமல் தவித்ததாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிலையில் மேலும் வரி மற்றும் கட்டண அதிகரிப்புகளை பொதுமக்கள் மீது சுமத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டு வருவதாக தமக்கு தகவல் கிடைத்துள்ளது என லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார். (நி)

# மின்கட்டண அதிகரிப்புக்கு எதிராக வழக்குத் தாக்கல் - சஜித்

(கொழும்பு)

மின் கட்டண அதிகரிப்புக்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் வழக்கை தாக்கல் செய்ய உள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

மின்சாரக் கட்டண அதிகரிப்பிற்கு எதிராக மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் குறித்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (நி)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 300 | 280 | 300 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 300 | 350 | 280 | 350 |
| தக்காளி | 180 | 160 | 150 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 180 | 180 | 280 |
| கோவா | 80 | 70 | 100 | 100 |
| கரட் | 120 | 200 | 200 | 300 |
| பூசணி | 80 | 80 | 60 | 80 |
| புடோல் | 180 | 240 | 150 | 160 |
| வாழைக்காய் | 160 | 180 | 120 | 160 |
| சின்ன வெங்காயம் | 250 | 280 | 350 | 350 |
| பெரிய வெங்காயம் | 150 | 160 | 280 | 160 |
| பாகற்காய் | 300 | 500 | 450 | 600 |
| வெண்டக்காய் | 350 | 300 | 250 | 320 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 80 | 120 |
| பயற்றங்காய் | 400 | 400 | 400 | 400 |
| லீக்ஸ் | 260 | 280 | 250 | 350 |
| பீற்றூட் | 160 | 200 | 160 | 250 |
| கறிமிளகாய் | 650 | 500 | 400 | 600 |
| முருங்கைக்காய் | 1800 | 1600 | 1200 | 2000 |
| போஞ்சி | 350 | 300 | 350 | 450 |
| கத்தரிதம்புள்ள | 250 | 250 | 200 | 280 |
| கீரை – 1 பிடி | 100 | 100 | 70 | 150 |
| தேசிக்காய் | 150 | 150 | 120 | 160 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 100 | 80 | 80-120 |
| இராசவள்ளி | 250 | 250 | 300 | 300 |
| வெங்காயப்பூ | 120 | 100 | 150 | 250 |
| முள்ளங்கி | 80 | 80 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 100 | 60 |
| வல்லாரை | 50 | 30 | 40 | 60 |
| ஈரப்பலா | 100 | 120 | 100 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தல் கட்டுப்...

யெனில் எல்லை நிர்ணயம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டால் மட்டுமே வேட்புமனுக்கள் இரத்துச் செய்யப்படும் என ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் ஜி.புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்பட மாட்டாது என இதுவரை குறிப்பிட்ட அறிக்கை எதுவும் வெளியிடப்படவில்லை எனவும், தற்போது அறிவிக்கப்பட்டுள்ள திகதியில் அதனை நடத்துவதில் உள்ள சிரமம் குறித்து மாத்திரமே உயர் நீதிமன்றத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் தலைவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

## பணவீக்கம்...

யம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, கடந்த வருடம் டிசம்பரில் 59.2 சதவீதமாக இருந்த தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான பணவீக்கம் ஜனவரியில் 53.2 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. (ம-7)

## தேசிய பாதுகாப்பு...

முதல் தேசிய பாதுகாப்பு தொடர்பான விடயங்களில் ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்குவதற்கும், அதனுடன் தொடர்புடைய உள்ளூர், சர்வதேச, பொருளாதார மற்றும் இராணுவக் கொள்கைகள் ஒருங்கிணைப்பு போன்றவற்றை மேற்கொள்கின்ற அடிப்படை நிறைவேற்று நிறுவனமாகவும் இயங்குகின்றது.

கடந்த ஜனவரி மாதம் 12ஆம் திகதி உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பின் மூலம் தேசியப் பாதுகாப்பு சபை நியதிச்சட்ட முறையுடனும், தெளிவான கட்டமைப்புடனும் கூடியதாக ஸ்தாபிக்க வேண்டிய தேவை பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, தேசியப் பாதுகாப்பு சபை பாராளுமன்ற சட்டத்தின் பிரகாரம் சட்டபூர்வமாக்குவதற்கு இயலுமாகும் வகையில் சட்டமூலமொன்றைத் தயாரிக்குமாறு ஆலோசனை வழங்குவதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ம-7)

## தனது மகன்களை...

இடம்பெற்றுள்ளது.

இத்துயரச் சம்பவம் இரத்தினபுரி குருவிட்ட கரபிஞ்ச வத்த பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் 6 மற்றும் ஒன்றரை வயது இரண்டு ஆண் குழந்தைகளே கிணற்றில் தாயார் தள்ளியதால் மரணமடைந்துள்ளனர்.

தனது கணவருடன் ஏற்பட்ட வாக்குவாதமே இந்நிலைமைக்கு காரணம் என ஆரம்ப விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதாக கூறப்படும் நிலையில், சம்பவம் தொடர்பில் குருவிட்ட பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## 21 தமிழ்...

குறித்த 21 சந்தேகநபர்களின் வழக்கு விசாரணையும் நேற்று செவ்வாய்க்கிழமை கொழும்பு மேலதிக நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட நிலையில் சந்தேகநபர்கள் சார்பாக சட்டத்தரணி வி.எஸ்.நிரஞ்சன் மற்றும் சட்டத்தரணி ரனித்தா ஞானராஜ் ஆஜராகியிருந்தனர்

குறித்த 21 நபர்களும் 2014ஆம் ஆண்டு பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டு வவுனியா, கிளிநொச்சி, பூசா ஆகிய பயங்கரவாத தடுப்புப் பிரிவினரின் முகாம்களில் பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு பின்னர் சில மாதங்கள் நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் சிறைச்சாலைகளில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் நேற்றைய தினம் குறித்த நபர்களின் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில் விசாரனைகளின் பின்னர் 21 நபர்களும் குற்றசாட்டுக்கள் எதுவும் இன்றி அனைத்து வழக்குகளிலும் இருந்து எந்த வித நிபந்தனைகளும் இன்றி கொழும்பு மேலதிக நீதவான் நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்டுள்ளனர். (ம-7,285)

## உயர் நீதிமன்றை...

தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எனவே இந்நிலையில் பொதுமக்களின் அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக தீர்ப்பளிக்கக் கோரி ஐக்கிய மக்கள் சக்தியினால் உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனுவில் நிதியமைச்சின் செயலாளர், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் அடங்கிய குழு பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர். (ம-7)

## பொருளாதார...

தல் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தும் ஒன்றல்ல எனவும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெறும் திகதி குறித்து நீதிமன்றம் தீர்மானிக்கும் எனவும் அவர் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும், பிரதம நீதியரசர் உள்ளிட்ட அனைத்து நீதிபதிகளும் ஒன்றாக அமர்ந்தாலும் கூட நாட்டின் பொருளாதாரப் பிரச்சினையை நீதிமன்றத்தில் தீர்த்துக்கொள்ள முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதாரத்தை முன்கொண்டு செல்லும் பொறுப்பு பாராளுமன்றத்திற்கே இருப்பதாக சுட்டிக்காட்டியுள்ள ஜனாதிபதி, 225 பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றிணைந்து வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தை மீட்டெடுக்க பாடுபட வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

கண்டி ஜனாதிபதி மாளிகையில் நேற்று பிற்பகல் நடைபெற்ற கண்டி மாவட்ட வர்த்தகர்கள், சட்டத்தரணிகளுடனான சந்திப்பின்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில் ஜனாதிபதி இதன்போது தெரிவித்த கருத்துக்களை, ஊடக அறிக்கையொன்றின் மூலம் ஜனாதிபதி ஊடகப் பிரிவு நேற்று வெளியிட்டுள்ளது.

இதேவேளை தேவைப்பட்டால், மக்கள் விடுதலை முன்னணி, ஐக்கிய மக்கள் சக்தியின் இரான், ஹர்ஷ போன்றவர்களின் முன்மொழிவுகளைக் கூட சர்வதேச நாணய நிதியத்தில் சமர்ப்பிக்க முடியும்என ஜனாதிபதி கூறியுள்ளார்.

சர்வதேசநாணய நிதியத்தின் உதவி கிடைக்காவிட்டால், மீண்டும் நெருக்கடியான நிலைமை ஏற்படும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)

## தேர்தலை...

அவர் மேலும் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், மக்களின் உரிமைகளை சீர்குலைக்கும் வகையில் நிதிப் பிரச்சினைகளை முன்வைத்து அரசாங்கம் தேர்தலை பிற்போட அனுமதிக்க முடியாது.

இது தொடர்பில் எதிர்வரும் நாட்களில் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்வோம். அடுத்த ஜனாதிபதித் தேர்தல் வரை அனைத்து தேர்தல்களையும் ஒத்திவைக்க அரசாங்கம் முயற்சிக்கிறது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிகாரப் பகிர்வு பற்றி அடிக்கடி பேசுகிறார். ஆனால் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைத் தேர்தல்கள் இரண்டையும் நடத்தாமல் இருக்க நடவடிக்கை எடுக்கிறார்.

நிதி நெருக்கடிகள், தேர்தலை நடத்த முடியாது என்று முன்னர் எந்த அரசாங்கமும் கூறவில்லை. இன்று எதற்கு நாம் முன்னுரிமை வழங்க வேண்டும்? உள்ளூராட்சி மன்றத் தேர்தலை அரசாங்கம் ஒத்திவைத்தால் எதிர்காலத்தில் ஆட்சி செய்யும் அரசாங்கங்கள் அதேமுறையை மீண்டும் மீண்டும் பயன்படுத்தும். இவ்வாறான தொரு நிலையை ஏற்படுத்திவிடக் கூடாது என்றார். (ம-7)

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 21/02/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1493
சிம்மம் 7 1 2 4 2 0

தன நிதானய
திகதி - 2023.02.21
சீட்டிழுப்பு இலக்கம் - 1068
L 12 13 24 44

கொவிசெத
திகதி 2023.02.21
சீட்டிழுப்பு இலக்கம் 3280
B 29 56 61 76

மெகா பவர்
திகதி 21/02/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1386
J 20 25 28 61 76

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2023.02.21
சீட்டிழுப்பு இலக்கம் 347
தனுசு 01 08 23 54 தனுசு

மஹஜன சம்பத
திகதி 2023/02/21
சீட்டிழுப்பு இலக்கம் 5038
T 0 4 6 7 9 4

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2013
நிறம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.02.21
தினம் செவ்வாய்க்கிழமை
U 10 11 59 75
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,672,280/-

சனிதா
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.02.21
சீட்டிழுப்பு இல : 4174
வர்ணம் : பச்சை
ரூ. 5,345,720/-
25 44 57 74 Y

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 291
சீட்டிழுப்பு திகதி 2023.02.21
செவ்வாய்க்கிழமை
03 14 38
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,988,240/-

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,377,974/-
திகதி 2023-02-21
வெற்றி வாரம் 3725
வர்ணம் சிவப்பு
28 43 47 59
9366 397
ரூ. 10,704,180/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
L 01 04 08 14 55
சீட்டிழுப்பு வாரம் 1189
திகதி 2023.02.21 செவ்வாய்க்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 307,750,972.20

அத கோடிபதி ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல : 1839
சீட்டிழுப்பு திகதி : 2023.02.21
ரூ. 5,523,940/-
21 41 51 73 D

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CHOLA FOODS CHOLA INTERNATIONAL (P) LTD
CIMS COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
CHOLA FOODS & CIMS COLLEGE
SCHOLARSHIPS
முற்றிலும் இலவச Hotel Management கற்கை நெறிகள்
வேலை செய்துகொண்டே படிக்கும் வாய்ப்பு
- FOOD & BEVERAGE
- COOKERY
- HOUSE KEEPING
- FRONT OFFICE
- DIPLOMA IN HOTEL MANAGMENT

போன்ற மேலும் பல கற்கைநெறிகள்
(கற்கைநெறி முடிவில் NVQ சான்றிதழ் வழங்கப்படும்)
✓ படிக்கும்போதே 25'000/= சம்பளத்துடனான வேலைவாய்ப்புக்கள்
✓ தங்குமிடம், உணவு வழங்கப்படும்
✓ வசதிகளற்ற மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
✓ வயதெல்லை 16 தொடக்கம் 25 வரை
✓ இருபாலரும் விண்ணப்பிக்கலாம்
→ மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள் ←
நிர்வாகத்தின் தெரிவே இறுதியானது
0777-068-777 (C-6028)

சுய தொழில்வாய்ப்பு - நிறைந்த வருமானம்
V2 TRAVELS CHOLA FOODS உடன் இணைந்து
புதிதாக ஆரம்பிக்கும் உணவுப்பொதிகள் விநியோகத்தில் உங்கள் பிரதேசத்திற்கான உணவுப்பொதிகள் விநியோகதாரராக நீங்களும் இணைந்து கொள்ளுங்கள்
பகுதிநேரமாக மாதம் 50'000/= மேல் சம்பாதிக்கலாம்
(இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)
ஆட்டோ/ மோட்டார் சைக்கிள்/சைக்கிள் வைத்திருத்தல் அவசியம்
யாழ் மாவட்டத்தில் எப்பகுதியில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்
V2 TRAVELS 0777-068-777 (C-6027)

உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் V2 TRAVELS
எமது கிளைகள்
- கிளிநொச்சி • சுன்னாகம்
- சாவகச்சேரி • மானிப்பாய்
- நெல்லியடி • பருத்தித்துறை
- திருகோணமலை • வல்வெட்டித்துறை
- கோப்பாய் • புத்தூர்
- பண்டத்தரிப்பு • சங்கானை
- கொழும்பு (C-6027)

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

# சபையில் நாளை விவாதம்

அத்தியாவசிய பொதுச்சேவை சட்டத்தின் கீழ் ஜனாதிபதியின் உத்தரவு மீது நாளை வியாழக்கிழமை விவாதம் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க அத்தியாவசிய பொதுச்சேவைச் சட்டத்தின் கீழ் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, வர்த்தமானி இலக்கம் 2319/80 இல் விசேட உத்தரவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

அதன்படி மின்சார விநியோகம், பெற்றோலிய பொருட்கள், எரிபொருள் விநியோகம் மற்றும் சுகாதார சேவைகள் தொடர்பான அனைத்து சேவைகளும் அத்தியாவசிய சேவைகளாக மாறியுள்ளன. (ம-7)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (14654)
076 825 7716 (ஆகாஸ்)

TECHNO WORLD
தொழில்நுட்பக் கல்லூரி
(வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்)
A/L தொழில்நுட்ப பிரிவு
செயன்முறை வகுப்புக்கள் மற்றும் பரீட்சைகள்
✳ உயிர்முறைமை தொழில்நுட்பம்
✳ பொறியியல் தொழில்நுட்பம்
மாவட்ட மற்றும் தேசிய ரீதியில் 5வது முறையாகவும் 98 மாணவர்கள் பல்கலைக்கழக தெரிவு
ஆரம்பம் 25.02.2023 சனிக்கிழமை காலை 8.00
தொடர்புகளுக்கு : 077 017 5346 (C-6024)

அறுசுவை உணவுகளிற்கு சுத்தமான
றோயல் நெய்
உங்கள் வாழ்வின் இனிய தருணங்களை தரமான **றோயல் நெய்** கொண்டு தயாரித்த அறுசுவை உணவுகளுடன் கொண்டாடி மகிழுங்கள்.
ஆய்வுகூடத்தில் தரம் பரிசோதிக்கப்பட்டு பொதியிடப்படுகின்றது.
Packed By:-
Royal Industries®
Marketed By:-
சிவா நறுமணப் பூங்கா®
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 2222 567
குறிப்பு
யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்து பாமசிகளிலும் சுப்பர்மார்க்கட்களிலும் பலசரக்கு கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். (C-6022)

கனடா விசாக்கள்
கனடா மாணவர் விசாவினை குறுகிய காலத்தில் 100% உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ள (28 வயதிற்குட்பட்டவர்கள் மட்டும்)
074 320 8923 (14672)

Personal/ Group Classes
தரம் 9,10,11 மாணவர்களிற்கான கணித, விஞ்ஞான, ஆங்கில பாடங்கள் தனியாகவும் குழுவாகவும் கற்பிக்கப்படும். (14684)
077 976 8800




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.02.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.